# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (18-04-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:143


### ஐ.தே.க. - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களின் பிரச்சினையால் குழம்பிப் போயிருக்கும்

# மூதூர்ப் பகுதியில் துப்பாக்கிச் சூடு!

# ஒருவர் மரணம்; பலருக்குக் காயம்!!

## பெரும் பதற்றம்; ஊரடங்கு அமுல்

மூதூர்,ஏப்ரல்18

**ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு இடையேயான அரசியல் பிரச்சினைகளால் குழம்பிப்போயிருக்கும் மூதூர்ப் பகுதியில், நேற்று மாலை 6.00 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே திடீரெனத் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் ஒருவர் பலியானார்;. ஏழுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.**

மூதூருக்கு அண்மையில் பாலத் தோப்பூருக்கும் மல்லிகைத்தீவுக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து மூதூர்ப் பகுதி எங்கும் பெரும் பதற்றம், பீதி பரவியது. நேற்றுமுன்னிரவில் வீடுகள், கடைகள் உட்பட ஐந்து கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மூதூர்ப் பிரதேசத்தில் ஊரடங்கைப் பொலிஸார் அமுலுக்குக் கொண்டுவந்தனர். அது இன்று காலைவரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

தமிழ் - முஸ்லிம் குழுக்களிடையேதான் துப்பாக்கிச் சூடு நடந்ததாகத் தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், சம்பந்தப்பட்ட குழுக்கள் எவை

(14 ஆம் பக்கம் பார்க்க)

### மூன்று அமைச்சர்களைக் கொண்ட

## உயர் மட்டக் குழுவை மூதூருக்கு அனுப்புகின்றது ஐ.தே.கட்சி!

### மு.காவுடனான முறுகலைத் தணிக்க முயற்சி

ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தணிப்பதற்கான வழி வகைகளைக் கண்டறிவதற்காக மூன்று அமைச்சர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை ஐ.தே.கட்சித் தலைமைப்பீடம் இன்று காலை மூதூருக்கு அனுப்பிவைக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

ஐ.தே.கட்சி பிரதித் தலைவரும் அமைச்சருமான கரு ஜயசூரிய, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, தொழில் அமைச்சர் மஹிந்த விஜேசிங்க, ஐ.தே.கட்சி தவிசாளர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவே மூதூர் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் அமைச்சர் ஹக்கீம் தலைமையில் மீண்டும் நேற்று மாலை மூதூரில் ஒன்று கூடி நீண்ட நேரம் ஆராய்ந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் மருத்துவமனை சென்ற 'சார்ஸ்' நோயாளி தலைமறைவு

### (சுகாதார அதிகாரிகள் கண்டுபிடிக்க முயற்சி)

கொழும்பு,ஏப்.18

'சார்ஸ்'நோயாளியொருவர் தனியார் வைத்தியசாலை ஒன்றிலிருந்து தலைமறைவாகியுள்ளார். அவரைத்தேடி சுகாதார அதிகாரிகள் வலைவிரித்துள்ளனர்.

சீனாவில் கடந்த ஒருமாதகாலமாகத் தங்கியிருந்துவிட்டு இலங்கை திரும்பிய முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெறச் சென்றார். அவருக்கு 'சார்ஸ்' நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரைப் பரிசோதித்த மருத்துவர், உடனடியாக அங்கொடை ஐ.டி.எச். மருத்துவமனையில் அவரைச் சேர்க்குமாறு நோயாளியின் உறவினர்களிடம் பரிந்துரை செய்துள்ளார்.

ஆனால், ஐ.டி.எச். மருத்துவமனையில் குறிப்பிட்ட நோயாளி அனுமதிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

மிகவும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய இந்த நோய்க்காவியுடன் தலைமறைவாகியுள்ள இந்த நபரினால் பலருக்கு 'சார்ஸ்' நோய் பரவும் அபாயம் உருவாகியுள்ளது.

தனியார் மருத்துவமனையில் இந்த நபரின் முழுவிவரங்கள் இல்லாத காரணத்தால் இவரைக் கண்டுபிடிக்க முடியாமல் சுகாதார அதிகாரிகள் திண்டாடுகின்றனர்.

(ஐ-12)

### யாழ்.கோட்டையினுள் கண்ணி அகற்றும் படையினர்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.கோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதிகளை இராணுவத்தின பொறியியல் பிரிவினர் நேற்றுப் பார்வையிட்டனர் என்று தெரியவருகிறது.

பெரும் எண்ணிக்கையான படையினர் கண்ணி அகற்றும் சாதனங்களுடன் யாழ்.கோட்டையினுள் காணப்பட்டனர்.

கண்ணிகள் அகற்றுவது தொடர்பான பூர்வாங்க வேலைகளில் இவர்கள் ஈடுபட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ)

## தொண்டர் ஆசிரியர் நியமனம்: இழுத்தடித்தால் போராட்டம்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.18

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு போட்டிப் பரீட்சை இன்றி நியமனம் வழங்கப்படவேண்டும்.

இல்லையேல் குடாநாட்டுக்கு வருகின்ற அமைச்சர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளை எதிர்த்து, கறுப்புக் கொடிகாட்டி மறியல் போராட்டங்கள் நடத்தப்படும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்வாறு எச்சரித்திருக்கின்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேற்று வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடத்திய செயற்குழு மாநாட்டிலேயே இவ்வாறு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி இல்ல சிறுவர்கள் உடுவில் வாழ்வகத்துக்கு!

தென்மராட்சி,ஏப்.18

கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தைப் பராமரிக்க நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த இந்துசமயப் பேரவை மறுப்புத் தெரிவித்ததையடுத்து, சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்களை உடுவில் வாழ்வகத்தில் ஒப்படைக்கும்படி சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

சைவச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அறையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நீதிவான் மேற்கண்ட உத்தரவை வழங்கினார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.வினாசித்தம்பி மற்றும் பேரவையின் உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்து சமயப் பேரவையின் சார்பில சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சட்டத்தரணி எஸ்.கந்தசாமி ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

சைவச் சிறுவர் இல்லம் தொடர்பாக நீதிமன்றத்துக்கு கிடைத்த முறைப்பாடுகள் குறித்து அந்த இல்லத்தை பராமரித்துவரும் இந்துசமயப் பேரவைக்கு நேரகாலத்தோடு அறிவித்திருந்தால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கமுடியும். ஆனால், அது பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருப்பது இந்து சமயத்துக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்று பேரவை உறுப்பினர்கள் நீதிவானிடம் சுட்டிக்காட்டினர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் குறித்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சக்திகிரீவனுக்கு பிணை

தென்மராட்சி,ஏப்.18

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக நீதிமன்ற காவலில் உள்ள இல்ல பொறுப்பாளரும் இந்துசமயப் பேரவையின் செயலாளருமான சிவப்பிரகாசம் சக்திகிரீவனை நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்க சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் அனுமதித்தார்.

25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு ஆட்பிணையிலும் செல்ல அவரை அனுமதித்த நீதிவான் ஒவ்வொரு சனி., ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணிக்கும் பி.ப.4.00 மணிக்கும் இடையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பம் இடவேண்டுமெனவும் பணித்தார்.

இதேவேளை, சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏனைய மூவரின் பிணை மனுவை சாவகச்சேரி நீதிவான் நிராகரித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த இல்லத்தின் விடுதிப் பொறுப்பாளர் மற்றும் இரு பணியாளர்கள் ஆகியோரைப் பிணையில் விடுமாறு கோரி நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி சிறுவர் இல்ல விவகாரம்; சட்டமா அதிபரின் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.18

கைதடி சைவச் சிறுவர் இல்லம் தொடர்பான விசாரணைகளை கொழும்பில் உள்ள சட்டமா அதிபர் அலுவலகம் நேரடியாகக் கையாளவுள்ளது. இதற்காக சிறுவர் இல்ல விவகாரம் சம்பந்தப்பட்ட சகல கோப்புகளையும் தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் உத்தரவிட்டிருக்கிறார்.

சிறுவர் இல்லம் தொடர்பான விசாரணைகளை தமது அலுவலகமே நேரடியாக கையாளவுள்ளது என்ற தகவலை சட்டமா அதிபர் கமலசபேசன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

பல தரப்புக்களிலிருந்தும் கிடைத்திருக்கின்ற முறைப்பாடுகளை அடுத்தே இந்த விவகாரத்தை தமது நேரடிப் பொறுப்பில் எடுத்திருப்பதாகவும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஐ)

## சூடா நாட்டைச் சேர்ந்த 10,000 படையினர் லீவில்!

கொழும்பு,ஏப்.18

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினரில் சுமார் 10 ஆயிரம் பேர் புத்தாண்டு விடுமுறை நிமித்தம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்றுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இலங்கையில் போர் ஆரம்பித்த காலத்திலிருந்து இவ்வாறு பெரும் எண்ணிக்கையான படையினர் விடுமுறையில் சென்றிருப்பது இதுவே முதற்தடவையாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாடு ஸ்ரீலங்காப் படையினரால் கைப்பற்றப்பட்ட காலம் முதல் 45 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் அங்கு நிலை கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டுக்குத் தேவையான கல், மணல் வெளியிடங்களிலிருந்து பெற யோசனை

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்மாவட்டத்தின் உட்கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், கல் மற்றும் மரங்கள் ஆகியவற்றை மாவட்டத்துக்கு வெளியே கொள்வனவு செய்வதுடன், இவற்றுக்குப் பதிலாக மாற்றுப்பொருளை இனங்காண்பதற் கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குடாநாட்டில் மணல் அகழ்வது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக குத் தீர்வுகாணும் வகையில் யாழ்செய லகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தி லேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பொறியியலாளர்கள், சூழல் பாதுகாப்புத்துறையினர், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் மற்றும் சமூக நலனில் அக்கறைகொண்டோர் கலந்துகொண்டனர்.

உள்ளூரில் கட்டடத்தேவைக்குரிய கற்களைப் பெற்றுக்கொள்வது பெரும் பிரச்சினையாக உள்ளது. உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டுள்ள வலி.வடக்குப் பிரதேசத்தில் லங்கா சிமெந்து, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குச் சொந்தமான காணியில் போதிய கல் இருந்தும் அதனைப் பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் -

இதுவிவகாரத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அங்கிருந்து கல் பெறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் ஓரளவு தட்டுப்பாடு நீங்கும் என்றும்- கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன், வவுனியாவில் 'குவாறி' ஒன்றை அமைத்து அங்கிருந்து கல்லை எடுத்து வருவதுடன், இந்தியாவிலிருந்து கல் எடுத்துவரவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

மணலைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் பிரதேச செயலர்கள் மற்றும் சூழல் பாதுகாப்புத்துறையினர் தேவைகளை இனங்கண்டு சிபாரிசு செய்ய வேண்டும். ஏற்படாத வகையில் மண் அகழப்படவேண்டும்.

அத்துடன், தொடர்ந்தும் ஒரே இடத்தில் மணலை அகழாது மாற்றிடங்களையும் கண்டறியவேண்டும். அது கட்டுமானப் பணிகளுக்கு உகந்ததாக இருக்கவேண்டும். கச்சாய், அரியாலை மற்றும் கெற்பலி போன்ற பகுதிகளில் உள்ள மணல் கட்டுமானப் பணிகளுக்கு உகந்தது. பூநகரி போன்ற இடங்களில் இருந்தும் மண் எடுத்துவரலாம்.

பனைமரங்களின் பாவனையைக் குறைத்து அதற்குப் பதிலாக வேறு மரங்களைப் பாவிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (எ-10)

## சமய சந்நிதிகளில்

கொற்றாவத்தை உப்புக்கிணற்றடி அம்மன் ஆலய வருடாந்த சங்காபிஷேக உற்சவப் பூசைகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளை அடுத்து நண்பகல் 12.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்று அன்னதானமும் நடைபெறவுள்ளது. (ஒ-70)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தேர்த்திருவிழா எதிர்வரும் 30 ஆம்திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோல விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 5 மணிக்கு ஏ.அனுசாந்தன் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

★ ★ ★

கோண்டாவில் பழங்கிணற்றடி பாதாள வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று நண்பகல் 11 மணி தொடக்கம் 12 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ஓ-10)

# புத்தாண்டு தினத்துக்கு மறுநாள் நடந்த மோதல்களில் 5 பேர் கொலை!

## 12 பேர் காயம்; 7 பேர் பொலீஸாரால் கைது!

கொழும்பு,ஏப்.18

நாடு முழுவதும் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற பல்வேறு சம்பவங்களில் ஐந்துபேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர், 12 பேர் காயமடைந்துள்ளனர்.

பதுரலிய பகுதியில் இருந்த இரு பகுதியினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் சுனில் சாந்த (வயது48) என்பவர் பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டார்.

தெல்கட பகுதியில் சாந்த (வயது19) என்ற இளைஞர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார். சிகரட் விற்பனையில் ஏற்பட்ட தகராறே இதற்குக் காரணம் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டை நகரில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் கித்சிறி (வயது 40) என்பவர் கத்திக்குத்துக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வெள்ளவாய பகுதியில் கோங்கல சூரியநந்த (வயது 27) என்ற இளைஞர், இனந்தெரியாத நபர்களால் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வலஸ்முல்ல பகுதியில் சூதாடிக் கொண்டிருந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் கலஹிட்டிய சுனில் (வயது 28) என்ற இளைஞர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின்பேரில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல்களின் போது 12 பேர் காயமுற்றுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (எ)

# இறக்குவானையில் தமிழ் இளைஞர் அடித்துக்கொலை! இருவர் கைது!!

கொழும்பு,ஏப்.18

இறக்குவானையில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இறக்குவானை, கங்கொட தோட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உறவினர் ஒருவரின் வீட்டுக்கு விருந்தினராக வந்த இராமன் அரசன் (வயது 24) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

இக்கொலை தொடர்பாக இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு பெல்மதுல்ல நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என இறக்குவானைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கவிரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு, செட்டியார் தெரு நகைக்கடையொன்றில் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் சதீஸ்குமார் (வயது 23) என்ற இளைஞரின் சடலம் நேற்று இறக்குவானையில் உள்ள அவரது வீட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

அந்த இளைஞரின் மரணத்தில் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (எ)

# பாடசாலையில் பிள்ளையை அனுமதிக்க 6 லட்சம் ரூபா கோரினாராம் அதிபர்!

## முறைப்பாடு குறித்து கல்வியமைச்சு விசாரணை

கொழும்பு,ஏப்.18

கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலையொன்றுக்கு ஒரு பிள்ளையை அனுமதிக்க அப்பாடசாலையின் அதிபர் ஆறு லட்சம் ரூபா கோரினார் எனக் கூறப்படும் சம்பவம் குறித்து கல்வியமைச்சு விசாரணை செய்து வருகிறது.

பாடசாலை வளவுக்குள் இருக்கும் பாதையைத் திருத்தியமைக்க குறிப்பிட்ட தொகையை வழங்கினால் பிள்ளையைப் பாடசாலையில் அனுமதிப்பதாகப் பெற்றோரிடம் அதிபர் கூறினாராம். இது குறித்து பெற்றோர் செய்த முறைப்பாட்டையடுத்து கல்வியமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

முதலாம் தரத்துக்குப் பிள்ளைகளை அனுமதிக்க பணமும் பொருள்களும் பெற்றுக்கொண்டனர் எனக் கூறப்படும் சுமார் நூறு பாடசாலை அதிபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன என்று கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஆயினும், முறைப்பாடுகளில் பெரும்பாலானவை வாய்மூலமே தெரிவிக்கப்பட்டிருப்பதால் முறையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அவர் சொன்னார். (எ)



பிணையில் விடுவிக்கப்பட்ட இந்துசமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் நீதிமன்றத்திலிருந்து இந்து விவகார அமைச்சர் மகேஸ்வரனுடன் வெளியே வருகிறார்.



இந்துவிவகார அமைச்சர் மகேஸ்வரனும் அவரது குழுவினரும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை பார்வையிடுகின்றனர்.

## மணலாறு பகுதியில் குண்டுக்குப் பலி!

கொழும்பு,ஏப்.18

மணலாறு, ஜானகபுர பகுதியில் ஒரு நபர் குண்டொன்றை வெடிக்க வைத்து உயிரை மாய்த்திருக்கிறார். அனில் லொக்குதிஸ்ஸ என்பவரே இச்சம்பவத்தில் மரணமானார் என்று வடமத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினமிரவு தனது வீட்டுக்கு எதிரிலேயே அவர் குண்டை வெடிக்கவைத்து இறந்திருக்கிறார். இச்செயலுக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

இச்சம்பவம் குறித்துப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கணிதபாட செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.18

தீவக கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும்-

கடந்த வருடம் தரம் 9 இல் கணித பாடம் கற்பித்த மற்றும் இவ்வருடம் தரம் 11 இல் கணிதபாட விசேட செயற்றிட்டத்தின்கீழ் கடமையாற்றும் ஆசிரியர்கள் இச்செயலமர்வில் பங்குபற்றமுடியும் என்றும் - தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

வருகை தரும் ஆசிரியர்கள் கைநூல், பாடநூல், பாடத்திட்டம் மற்றும் கடந்தவருட தரம் 9 மாகாணமட்டக் கணிதபாட வினாத்தாள் போன்றவற்றையும் எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

# மூதூர் விவகாரம் பற்றி பிரதமரிடம் காதர் அறிக்கை சமர்ப்பித்தார்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் எனக்குமிடையில் தனிப்பட்ட விரோதமெதுவும் இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளின் பேரிலேயே மூதூர் சென்றேன். அங்கு நடந்தவற்றை விளக்கிப் பிரதமரிடம் அறிக்கை கையளித்தேன் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம்.ஏ. காதர் நேற்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

எமக்கிடையேயுள்ள பிரச்சினைகளை நான் ஒருபோதும் பொது மேடைகளுக்குக் கொண்டு சென்றதில்லை. மூதூரில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்படவேண்டும்.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சகல தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (எ)

# பாம்புக்கடியை எலிக்கடியென எண்ணியதால் சிறுவன் உயிரிழப்பு!

## குருநகர்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

பாம்பு கடித்ததை எலி கடித்ததாகத் தவறாகப் புரிந்துகொண்டதால் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழக்க நேரிட்டுள்ளது.

யாழ். குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சேவியர் நேரியல் ஜோன் அஜந்தன் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

இச்சிறுவன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது ஏதோ கடிக்கவே திடுக்கிட்டு விழித்ததாகவும் -

தனக்கு எலி கடித்ததாக நம்பிய சிறுவன் அதனையே பெற்றோரிடம் கூறியதாகவும் -

சிறுவன் கூறியதை நம்பிய பெற்றோர் எலிக்கடிக்கான கை வைத்தியங்களைச் செய்துவிட்டு உறங்கியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை 3 மணியளவில் சிறுவனின் உடல்நிலை மோசமடையவே, அவனை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். வழியில் சிறுவனின் உயிர்பிரிந்தது.

இறுதியில் மருத்துவப் பரிசோதனையின்போதே சிறுவனுக்கு பாம்பு தீண்டியமை தெரியவந்தது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சிறுவனின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-15)

# யாழ். ஆஸ்பத்திரியில் கிளினிக் நோயாளிகளுக்கு தொலைக்காட்சி வசதி!

யாழ்போதனா வைத்தியசாலைக்கு வரும் கிளினிக் நோயாளர்களை ஆற்றுப்படுத்துவதற்காக வீடியோ மூலம் படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

நோயாளிகளின் உடல் உபாதை மற்றும் நீண்டநேரம் சிகிச்சைக்காகக் காத்திருப்பதால் ஏற்படும் சலிப்பு என்பவற்றைத் தணித்து அவர்களை சமூக நிலையில் வைத்திருக்க வசதியாகவே இந்தப் படக்காட்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கிளினிக் பிரிவில் பயன்படுத்துவதற்கான வீடியோ, தொலைக்காட்சிப் பெட்டி என்பவற்றை கொழும்பிலுள்ள சுகாதார கல்விப்பிரிவு, தலைமைச் செயலகம், யாழ்ஆஸ்பத்திரிக்கு வழங்கியுள்ளது.

படக்காட்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து கிளினிக் நோயாளர்கள் மத்தியில் வழமையாகக் காணப்படும் நெருக்கடிகள், குழப்பங்கள் தணிந்திருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-15)

# ஈராக்கில் பெரும் மனிதப் புதைகுழி

பக்தாத், ஏப்ரல்18

வடக்கு ஈராக்கிய நகரான கிர்குக் அருகே மிகப் பெரும் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தது 2ஆயிரம் பேர் வரையில் அந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று குர்திஷ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

1980களில் ஈராக்கிய இராணுவம் குர்திஷ் பகுதிகளில் தாக்குதல் நடத்தினர். அப்போது ஈராக்கிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று குர்திஷ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி ஈராக்கிய இராணுவத்தின் முன்னாள் முகாம் ஒன்றுக்கு அருகிலேயே இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், சுயாதீனமான குழுக்கள் எதுவும் இதனை உறுதிப்படுத்தவில்லை.

1980களில் ஈராக்கை சுத்தப்படுத்தும் கொள்கை என்ற பெயரில் அதிபர் சதாம் மேற்கொண்ட நடவடிக்கையின்போது ஒரு லட்சத்துக்கும் அதிகமான குர்திஷ்கள் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (ம)

# ஈராக் மீதான ஐ.நா. தடைகளை நீக்கக் கோருகிறது அமெரிக்கா!

நியூயோர்க், ஏப்.18

சதாமிடமிருந்து ஈராக் விடுவிக்கப்பட்டுவிட்டதனால் அந்த நாட்டின் மீது ஐ.நா. விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார். "இப்போது ஈராக் சுதந்திரமாகியுள்ளது. எனவே அந்த நாட்டின் மீதான தடைகளை ஐ.நா. விலக்கிக்கொள்ள வேண்டும்" - என்றார் புஷ்.

ஈராக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஐ.நாவின் தடைகள் இடைஞ்சலாக இருக்கும் என்பதால் அவை விரைவில் அகற்றப்படுவதே சிறந்தது என்றும் புஷ் கூறினார்.

ஆனால், ஈராக்கில் அணுவாயுதங்களோ, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களோ இல்லை என்பதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்தினாலேயே அதன்மீதான தடைகளை ஐநா. அகற்ற முடியும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஈராக் மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்காவால் கூறப்பட்ட மிக முக்கியமான காரணமாக இவை முன்வைக்கப்பட்டன. எனவே அதற்கு விடை கிடைக்காமல் தடையை நீக்குவது சிரமமானது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், ஈராக் மீதான ஐ.நாவின் பொருளாதாரத் தடைகளை அகற்றுவதற்கான பிரேரணையை விரைவில அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கும் என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் நெக்ரோபொன்ட் தெரிவித்தார். "நாம் இந்த விடயத்தில் படிப்படியாகவே முன்னேற வேண்டி வரும்" - என்றார் அவர்.

ஈராக்கில் அமெரிக்கா நடத்திய போரை எதிர்த்த ரஷ்யாவும் பிரான்ஸும் சிலவேளைகளில் ஐ.நா. தடைகள் நீக்கப்படுவதையும் எதிர்க்கக் கூடும். அந்த இரு நாடுகளும் பாதுகாபபுச் சபையில் வீட்டோ அதிகாரம் உளளவை என்பதால் தடை நீக்கப்படுவதை தடுக்கும் அதிகாரம் அவற்றுக்கு இருக்கின்றது. ஆனாலும் ஈராக்கின் எதிர்காலம் கருதி அந்த நாடுகள் அப்படி நடந்துகொள்ளமாட்டா என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## சதாம் யேமனில்?

லண்டன், ஏப்.18

அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுப்பதற்கு முன்னரே சதாம் ஹுசைன் யேமன் நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக லண்டனில் உள்ள ஈராக்கியர்கள் சிலரை மேற்கோள் காட்டி லண்டன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

யேமன் நாட்டில் சதாமுக்கு ஆதரவாளர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடன் அவர் தென்னமெரிக்க நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்து வருகின்றார். சதாமின் அமைச்சர்களும் அதிகாரிகளும கூட போருக்கு முன்னரே யேமனுக்கும் சிரியாவுக்கும் தப்பிச் சென்றுவிட்டனர். இனி அவர்கள் அங்கிருந்து போலிப் பாஸ்போர்ட்டுக்களுடன் பாகிஸ்தான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு தப்பிச்செல்ல முயன்று வருகின்றனர் என்றும் அந்தப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (ம)

# பிலிப்பைன்ஸில் அமெரிக்கப் படை

## கூட்டுப் பயிற்சிக்காகத் தரையிறக்கம்

ஜகார்த்தா, ஏப்.18

கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க இராணுவத்தினர் பிலிப்பைன்ஸில் நேற்று வியாழக்கிழமை தரையிறங்கினர். அவர்கள் அங்கு பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் இணைந்து பெருமெடுப்பிலான பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர்.

உலகின் மிகப் பெரிய முஸ்லிம் நாடான இந்தோனேஷியா ஈராக் மீதான போரில் அமெரிக்காவுக்கு ஆதரவளித்து வந்தது. இதனால், அங்கு பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அமெரிக்காவுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் அமெரிக்கப் படைகள் கூட்டுப் பயிற்சிக்காக பிலிப்பைன்ஸில் தரையிறங்கியுள்ளமை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

பிலிப்பைன்ஸில் அமெரிக்கப் படைகள் முன்னர் தங்கியிருந்த கடற்படைத் தளமான சப்சிக் குடா பகுதியிலேயே பயிற்சிக்கான முதலாவது படைப்பிரிவு நேற்று தரையிறங்கியது. விரைவுக் கடற்கலங்களில் ஏற்றி வரப்பட்ட 450 அமெரிக்கப் படையினர் முதற்கட்டமாக அங்கு தரையிறக்கப்பட்டனர்.

கூட்டுப் பயிற்சிகள் தலைநகர் மணிலாவுக்கு வடக்கே இடம்பெறவுள்ளன. அதில் ஆயிரத்து 200 அமெரிக்கப் படையினரும் 2ஆயிரத்து 500 பிலிப்பைன்ஸ் படையினரும் கலந்துகொள்ள உள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் தனிநாடு கோரி முஸ்லிம் தீவிரவாதிகள் போராடிவருகின்றனர். அவர்களுக்கு எதிராக கடந்த பல ஆண்டுகளாக பிலிப்பைன்ஸ் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களுக்கும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகின்றது.

இதனாலேயே பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை நடத்துவதில் அமெரிக்கா அதிக ஆர்வம் காட்டுகின்றது என்று கூறப்படுகின்றது. எனினும், அமெரிக்கப் படைகளுடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ள தமது அரசு எடுத்த முடிவை கண்டித்து தலைநகர் ஜகார்த்தாவில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

# போர் இன்னும் முடியவில்லை

## அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு

வாஷிங்ரன், ஏப்.18

ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து சதாம் அகற்றப்பட்டு விட்ட போதும் போரில் இன்னும் முழுமையான வெற்றி கிடைத்துவிடவில்லை

உலக அரங்கில்

என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையில் சிறிய வர்த்தகர்களின் கூட்டத்தில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈராக்கில் எமக்கு வெற்றி நிச்சயம் என்றாலும் இன்னும் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. விரக்தி அடைந்த ஆபத்தான ஆள்கள் இன்னும் அங்கு இருக்கின்றார்கள்.

அச்சுறுத்தலில் இருந்து மக்களைக் காப்பாற்றும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. ஒரு மாதத்துக்கு முன்னர் ஈராக் மக்களுக்கு அவர்களது நாடு ஒரு சிறைச்சாலையைப் போன்று இருந்தது. உலகை அச்சுறுத்தும் பயங்கரவாதிகளின் சொர்க்கமாக அந்த நாடு விளங்கியது.

தற்போது உலகம் பாதுகாப்பாக உள்ளது. ஈராக் மக்கள் தங்கள் தலையெழுத்தை மாற்றும் தகுதி பெற்றுவிட்டனர்.

ஈராக்கில் எதிரிகள் சரணடையும் வரையும் அல்லது அழித்தொழிக்கப்படும் வரையும் அவர்களை கூட்டுப் படையினர் விரட்டிக்கொண்டே இருப்பர்.

மத்திய கிழக்கு நாடுகளில் சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்துக்கு ஈராக் ஓர் உதாரணமாகத் திகழும். பயங்கரவாதத்துக்கு எதிரான போரில ஈராக்குக்கு எதிரான சண்டை முக்கியமானது. ஆனாலும், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பண பலம் கொண்ட எதிரிகளால் அமெரிக்காவுக்கு இன்னும் ஆபத்து உள்ளது என்றார். (ம)

# குழாய் மூலம் சிரியாவுக்கு ஈராக் எண்ணெய் ஏற்றுமதி

## தடுத்துவிட்டதாகக் கூறுகிறது அமெரிக்கா

வாஷிங்ரன், ஏப்.18

ஈராக்கில் இருந்து சிரியாவுக்கு குழாய்கள் மூலம் இடம்பெற்று வந்த எண்ணெய் ஏற்றுமதியைத் தான் தடை செய்து விட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக்கை கைப்பற்றிய பின்னர் தமது படையினர் நடத்திய தேடுதல்களில் குழாய்கள் மூலம் சிரியாவுக்கு ஈராக் எண்ணெய் ஏற்றுமதி செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபை விதித்த தடை உத்தரவுகளை மீறி ஈராக், சிரியாவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்து வந்துள்ளதாக அமெரிக்கா கூறுகின்றது. குழாய்கள் மூலம் நாளாந்தம் 2 லட்சம் பீப்பாய்கள் மசகு எண்ணெய் சிரியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக அமெரிக்கா கூறுகின்றது.

"ஈராக் சட்டவிரோதமாக சிரியாவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்து வந்தது. இதனை நாம் தடுத்து நிறுத்தி விட்டோம். அதன் மூலம் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது" - என்றார் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட். (ம)

## ஈராக் போருக்கு 200 கோடி டொலர் செலவிடப்பட்டது

வாஷிங்ரன், ஏப்.18

ஈராக் மீதான போருக்கு அமெரிக்க பாதுகாப்புத்துறை இதுவரை இந்திய நாணய மதிப்பில் 200 கோடி டொலர் நிதியை செலவிட்டுள்ளதாக இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தவிர படைகள் நாடு திரும்புவதற்கு மேலும் பல கோடி டொலர்கள் தேவைப்படும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். ஈராக் மறுசீரமைப்புப் பணிகளுக்கான செலவு மதிப்பீடுகள் குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. (ம)

# போரின் வடுவான ஈராக்கிய சிறுவனுக்கு குவைத்தில் மேலதிக மருத்துவ சிகிச்சை

## என்கைகள் மீண்டும் முளைக்குமா? - சிறுவன் கேள்வி

குவைத்சிற்றி, ஏப்.18

ஈராக்கில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தனது இரண்டு கைகளையும் இழந்த ஈராக்கியச் சிறுவனுக்கு குவைத்தில் தற்போது தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.



அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் அலி இஸ்மாயில் அப்பாஸ் என்ற அந்தச் சிறுவனின் கர்பிணித் தாயார் உட்பட குடும்பத்தின் 7 உறுப்பினர்களும் உயிரிழந்து விட்டனர். அப்பாஸும் அந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தான்.

குண்டுத் தாக்குதலால் மிகமோசமாகச் சேதமடைந்த அப்பாஸின் கைகள் இரண்டையும் டாக்டர்கள் வெட்டி அகற்றி விட்டனர். போதிய சிகிச்சைகள் இன்றி அவதிப்பட்ட அந்தச் சிறுவனைப் பற்றி உலகின் சகல ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டன.



இதனை அடுத்து 'உடல் உறுப்புக்களை இழந்தோர் சங்கம்' என்ற உலகளாவிய அமைப்பு அப்பாஸுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தது. இதனால், அப்பாஸ் விசேட விமானம் மூலம் குவைத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளான்.

இரு கைகளையும் இழந்ததால் தனது வாழ்க்கைக் கனவுகள் எல்லாம் வெறும் காகிதங்களாகிப் போனதாக அப்பாஸ் சொல்லியிருந்தான். உலகை உருக்கியது அந்தச் சிறுவனின் கூற்று.

குவைத் வந்திறங்கியதும் டாக்டர்களைப் பார்த்து "என் கைகள் திரும்பவும் முளைக்குமா?" - என்று அந்தச் சிறுவன் கேட்டது, அனைவரையும் கண்ணீரில் கரைய வைத்தது.

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தச் சிறுவனை காப்பாற்ற மிகச் சிறந்த வைத்தியர்கள் எல்லோரையும் பயன்படுத்தப் போவதாக குவைத் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அப்பாஸுக்கான முதற்கட்ட சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக அமைந்ததாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தச் சிறுவனுக்கு மேலதிக சிகிச்சைகள் தேவைப்பட்டால் அதனை வழங்குவதற்கும் தயாராக 'உடல் உறுப்புக்களை இழந்தோர் சங்கம்' நிதி திரட்டி வருகின்றது.

பெருமளவு நிதி உதவி 'சிறுவனுக்'காக வந்து குவிவதாக அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். "மேலதிக சிகிச்சைக்காக சிறுவனை பிரிட்டனுக்குக் கொண்டு வரவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஈராக்கில் இருந்து அவனை குவைத்துக்குக கொண்டு செல்ல தனியான அம்புலன்ஸ் விமானம் ஒன்றையே நாம் ஏற்பாடு செய்திருந்தோம்" - என்று கூறினார்.

## சதாமின் தலைக்கு ரூபா ஒரு கோடி அறிவிப்பு

அமெரிக்கப் படைகளின் தாக்குதலை அடுத்து தலைமறைவாகி உள்ள சதாம் ஹுசைன் பற்றிய உளவுத் தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு இந்தியப் பண மதிப்பில் ஒரு கோடி ரூபாய் பணப் பரிசு வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது பற்றிய சுவரொட்டிகள் ஈராக முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன. அதன் அயல் நாடுகளிலும் அத்தகைய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அதேசமயம் -

அமெரிக்கா ஈராக்கைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அந்த நாட்டின் பணத்துக்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது. புதிய அரசு ஒன்று பொறுப்பேற்று புதிய நாணயங்களை அச்சிடும் வரை ஈராக்கில் அமெரிக்கா டொலர் நாணயங்களைப் புழக்கத்தில் விடுவதற்கும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது. (ம)

# 38 ரூபா முதலீட்டுடன் ஆரம்பித்து கைத்தறித் தொழிலில் உயர்ந்தவர்

## கடும் உழைப்பே உயர்வு தரும் என்கிறார் ஜெயினுலாப்தீன்



ரீ.என்.எல்.தொலைக்காட்சி 'நேருக்குநேர்' நிகழ்ச்சியில் தொழிலதிபர் ஜெயினுலாப்தீனை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்தினம்.

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 15 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ஜெயினுலாப்தீன்.

கைத்தறிச்சேலை, கைத்தறித்துணி வகைகள், படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனம் கண்டி பெயிரிக்ஸ் பிறைவேட் லிமிட்டெட் ஆகும். அதன் உரிமையாளர் அப்துல் காதர் மொஹமட் ஜெயினுலாப்தீன் ஆவார்.

**வர்த்தக ஸ்பெஷல்**

38ரூபா முதலீட்டுடன் கைத்தறி நெசவுத்துறையில் உள்ளோருக்கு நூல் சாயமிட்டு வழங்கும் தொழிலை 1976 ஆம் ஆண்டு ஆரம்பித்ததன் மூலம் இவர் தொழிலில் காலடியெடுத்து வைத்தார். ஒரு வருட காலத்திற்குள் தனக்கென ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டார்.

காலை 5.00 மணிமுதல் இரவு 11.00 மணிவரை கடுமையாக உழைத்து, உழைப்பு உயர்வைத் தரும் என்பதை நிரூபித்துள்ளார். கல்முனையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டதையடுத்து 1986ஆம் ஆண்டு மாத்தளைக்கு இடம்பெயர்ந்தார். அங்கு சிறியளவில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு படிப்படியாக முன்னேறினார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழிலதிபர் ஜெயினுலாப்தீனை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* நீங்கள் இந்தத் துறையில் எவ்வாறு ஈடுபட்டீர்கள்? உங்கள் வெற்றிக்கான பின்னணி எது?

*பதில்:-* கல்முனையில் 38 ரூபாவுடன் நூல் சாயமிடும் தொழிலில் ஈடுபட்டுப் படிப்படியாக உயர்ந்தேன். 1986ஆம் ஆண்டு கல்முனையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டதால்தான் மாத்தளைக்கு இடம்பெயர்ந்தேன். சிறிய அளவில் அங்கு கைத்தறி நெசவுத் தொழிலை ஆரம்பித்தேன். சிறிய கைத்தறி நெசவாளர்களுக்கு தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வாய்ப்புக் குறைவாக இருந்த காலகட்டம் அது. இந்த வேளையில் மாத்தளையில் மகாபொல கண்காட்சி இடம்பெற்றது. இந்தக் கண்காட்சியில் எமது தயாரிப்புக்களையும் காட்சிக்கு வைத்தோம். இக்காட்சிக்கு மாத்தளை செலான் வங்கி முகாமையாளர் டில்ஷன் பெரேரா வருகைதந்தார்.

எமது காட்சியறைக்கு விஜயம் செய்த அவர், இத்தொழிலை உங்களால் அபிவிருத்தி செய்ய முடியாதா? எனக் கேள்வி எழுப்பியதுடன் செலான் வங்கிக்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். நான் வங்கிக்குச் சென்று அவரைச் சந்தித்தேன். அவர் எனது தொழிற்சாலையின் பேரில் பத்துலட்ச ரூபாவைக் கடனாக வழங்கினார்.

6 தறிகளை வைத்திருந்த நான் பின்னர் 18 தறிகளை அமைத்தேன். அடிக்கடி செலான் வங்கி முகாமையாளர் வங்கி அலுவலர்களுடன் எனது தொழிற்சாலைக்கு விஜயம் செய்வார். கணக்குவழக்குகளைப் பரிசோதிப்பதுடன் வியாபார வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவார்.

இக்காலகட்டத்தில் எமது தொழிற்சாலையின் மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டது. மின்சாரத்துக்கென ஒரு ஜெனரேட்டரை கொள்வனவு செய்ய மீண்டும் செலான் வங்கி முகாமையாளர் பத்து லட்சம் ரூபாவை வழங்கினார். நாங்கள் தனியார் வீடுகளிலும் தறிகளைக் கொடுத்து நெசவுத் தொழிலைப் பெருக்கினோம் இவர்களுக்குத் தேவையான சாயமிட்ட நூல் வகைகள் மற்றும் டிசைன்களைக் கொடுத்து அவர்கள் தயாரிக்கும் துணிகளை நாங்கள் கொள்வனவு செய்கின்றோம்.

இப்போது வியாபாரிகளின் தேவையை எங்களால் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. இந்தியாவிலிருந்து துணிவகைகள் இறக்குமதி செய்யப்படுவதால் நாங்கள் அவற்றுடன் போட்டிபோடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இருந்தும் எமது தயாரிப்புக்களுக்கு சந்தையில் பெரும் கிராக்கி நிலவுகின்றது. பாவனையாளர்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் நாங்கள் துணிவகைளைத் தயாரிப்பதால் எமது உற்பத்திகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது.

*கேள்வி:-* நீங்கள் மாத்தளையில் தொழில் புரிகின்றீர்கள். உங்களுக்கு அங்கு போட்டி இருக்கின்றதா?

*பதில்:-* மாத்தளையில் எனது தொழிலுக்கு எவ்வித போட்டியும் இல்லை. அகில இலங்கை ரீதியில் இருவர் மட்டுமே என் தொழிலுடன் போட்டியாக இருக்கின்றனர். ஒருவர் மாவனெல்லையைச் சேர்ந்தவர். அடுத்தவர் கொழும்பைச் சேர்ந்தவர். அவர்கள் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள். எமது உற்பத்திகளின் விலை குறைவாக இருப்பதால் இவர்களையும் எமது போட்டியாளர்கள் என்று கூறமுடியாது.

தரமற்ற இந்திய உற்பத்திகள் குறைந்த விலையைச் சந்தைக் காட்டிக் காண்பித்து இறக்குமதியாவதால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். பருத்தியுடன் பொலியெஸ்டர் நூலைக் கலந்து உற்பத்தியாகும் துணி வகைகள், பருத்தித் துணி என்ற பெயரில் இறக்குமதியாகி விற்பனையாகின்றன. தனிப் பருத்தி என துணிகள் இறக்குமதியானால் அது எமது பருத்தித் துணிகளின் விலையைப் போல் இருக்கும். தரத்தைப் பார்த்து துணிகளைக் கொள்வனவு செய்வோர் மிகக் குறைவு; தரத்தைப் பார்த்து கொள்வனவு செய்வோரால்தான் எமது உற்பத்திகள் விற்பனையாகின்றன.

*கேள்வி:-* இந்தியத் துணிவகை இறக்குமதியிலுள்ள குளறுபடிகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிட்டீர்களா?

*பதில்:-* சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தோம். சமீபத்தில் அமைச்சர்களுக்கும் இது தொடர்பாக விளக்கமளித்தோம். துணிவகைகளுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக பத்து சதவீதம் இறக்குமதியின் போது அறவிடப்படுகின்றது. இதேவேளை நூல் மற்றும் சாயம் போன்றவற்றின் இறக்குமதியின் போது இருபது சதவீதம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அறவிடப்படுகின்றது. இதுகுறித்து உரியவர்களுக்கு எடுத்துரைத்தால் கொள்கை திட்டமிடலில் இப்படித்தான் இருக்கின்றது என்கின்றனர். இதன் காரணமாக இத்தொழிலைப் பலர் கைவிட்டுவிட்டனர். வெகு சிலரே இத்துறையில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

*கேள்வி:-* நீங்கள் எந்த விதமான வரி அறவிட வேண்டுமென ஆலோசனை கூறுகின்றீர்கள்?

*பதில்:-* துணி வகைகளுக்கு அறவிடப்படுவதை விட நூல், சாயம் மற்றும் இரசாயன பொருள்களுக்கும் குறைவான வரியை அறவிட வேண்டும். இல்லாவிட்டால், துணி வகைகளுக்கு அறவிடப்படும் வரியையே இதற்கும் அறவிடலாம்.

துணி வகைகளுக்கான மூலப்பொருள்களுக்கு குறைந்த வரியையும் துணிவகைகளுக்கு அதிக வரியையும் அறவிட்டால், உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்படாது என்பதே எனது அபிப்பிராயமாகும். அத்துடன் மூலப்பொருள்களை இறக்குமதி செய்யும் போது அறவிடப்படும் வரி குறைக்கப்பட்டால் கைத்தறி மற்றும் மின்தறித் துறையில் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் இறக்குமதி துணிவகைகளுடன் போட்டியிடும் வகையில் துணிவகைளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய முடியும்.

*கேள்வி:-* வெளியூர் துணி வகைகள் அதிகமாக இந்தியாவிலிருந்து இறக்குமதி ஆகின்றனவா?

*பதில்:-* இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. இறக்குமதி செய்யப்படும் துணிவகைகளின் தரம் குறித்து கவனம் செலுத்தவேண்டும். வெளிநாடுகளிலிருந்து மிகத் தரம் குறைந்த துணி வகைகளை இறக்குமதி செய்வதால் பாவனையாளர்கள் பாதிப்படைகின்றனர். உள்ளூர் துணி உற்பத்தியாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

*கேள்வி:-* உங்கள் தொழிற்சாலையில் எத்தனை பேர் தொழில் புரிகின்றனர்?

*பதில்:-* நேரடியாக 80 பேர் தொழில் புரிகின்றனர். மேலும் 50பேரளவில் வீடுகளில் வைத்துப் படுக்கை விரிப்புக்களின் ஓரங்களைத் தைப்பது, கைத்தறி சேலைகளை செய்வது, குஞ்சங்களைப் பிடிப்பது போன்ற தொழில்களைச் செய்கின்றனர்.

*கேள்வி:-* இத்துறையில் அறவிடப்படும் வரிகளைக் குறைத்தால் மேலும் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்குவீர்களா?

*பதில்:-* இத்தொழிலில் ஈடுபட்டிருந்த பலர் தொழிற்சாலைகளை மூடிவிட்டனர். கல்முனை அருகே மருதமுனை என்ற ஊரில் நான் இருந்தேன். இந்த ஊர் கைத்தறிக்குப் பெயர் போனது. இப்போது அங்கு கைத்தறிகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. இந்த ஊருக்குவரும் அமைச்சர்கள் அனைவரும் கைத்தறி தொடர்பாக பல வாக்குறுதிகளை வழங்குவர். தேர்தல் காலங்களில் மாத்திரம் இந்த ஊருக்குவரும் அமைச்சர்கள் கைத்தறித் துறையை ஊக்குவிப்போம் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசுவர். 6ஆயிரம் பேர்வரை கைத்தறித் துறையில் ஈடுபட்டிருந்தனர்.

*கேள்வி:-* இத்துறை அபிவிருத்திக்கு வரிக்குறைப்பு மாத்திரம் போதுமானதா?

*பதில்:-* வரிக் குறைப்புடன் தரம் குறைந்த துணி வகைகளை இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய வேண்டும்.

*கேள்வி:-* வங்கித் துறையில் வேறு என்ன உதவிகளை எதிர்பார்க்கின்றீர்கள்?

*பதில்:-* தற்போது வழங்கப்படும் உதவிகளே போதுமானவை. இவற்றைவிட அதிக உதவிகளைப் பெறுவதால் இரு தரப்பினரும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி இருக்கும். செலான் வங்கி குறைந்த வட்டிக்கு கடன் வழங்குகின்றது. மின்சாரத் தடைதான் எங்களது முதல் எதிரி.

*கேள்வி:-* உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன? வேறு துறைகளில் ஈடுபடுவதற்கு எண்ணம் இருக்கின்றதா?

*பதில்:-* இந்தத் துறையில்தான் எனக்கு ஈடுபாடு அதிகம். அத்துடன், புதிய தொழிலைப் பயில எனது வயது இடம்கொடுக்காது. எனவே, இத்துறையில் தொடரவே நான் விரும்புகின்றேன்.

*கேள்வி:-* எமது முதலீட்டுச்சபை மூலம் நீங்கள் என்ன உதவிகளை எதிர்பார்க்கின்றீர்கள்?

*பதில்:-* நூல் சாயமிடும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றேன். இதனால், நீர் அசுத்தமடையும். அசுத்தமடையும் நீரை சுத்தப்படுத்த வேண்டிய வழிமுறைகளையும் உதவியையும் வழங்க வேண்டும்.

*கேள்வி:-* நீங்கள் பாவனையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் விடுக்கும் செய்தி என்ன?

*பதில்:-* எனது ஒரே வேண்டுகோள், வியாபாரிகள் தரம் குறைந்த துணி, ஆடைவகைகளை இறக்குமதி செய்யக்கூடாது. பாவனையாளர்கள் தரம் குறைந்த துணிகளைக் கொள்வனவு செய்யக்கூடாது. விமானநிலையம் மற்றும் துறைமுகங்களில் துணிவகைகள் பரீட்சிக்கப்பட்டு அவை தரம் அற்றவையாக இருந்தால் தடைவிதிக்கும் நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஜெயினுலாப்தீன்.

# வரியால் பாதிப்பெனில் தெரிவியுங்கள்; தக்க நடவடிக்கை மேற்கொள்வோம்!

## யாழ். அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி உறுதி

அராலி, ஏப்.18

வரிவிடயத்தில் தவறு நிகழ்ந்து எவராவது பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக எமக்குத் தெரியப்படுத்துங்கள், நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை எடுப்போம்.

- இவ்வாறு உறுதியளித்தார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி.

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய 63ஆவது ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வரி அறவிடுதல் குறித்து பலபேர் பல்வேறு வகைகளில் பேசிக்கொள்கின்றனர். வரி இன்றைய சூழலின் தவிர்க்க முடியாத தேவையாகும். அதாவது வரி என்பது இந்த மக்களுடைய இறைமையை தீர்மானிப்பதாகும். அதை ஏன் பெறுகின்றோம் என்றால் இன்றைய சமாதானச் சூழ்நிலையில் எமது படையணிகளை தக்க வைப்பதற்கு இவ்வரி அறவீடு அத்தியாவசியமானதொன்றாகும். எமது படைகள் பலவீனப்பட்டுவிட்டால் ஒப்பந்தம் என்றும்; உடன்படிக்கை என்றும் இருக்க முடியாது.

வீட்டுப் பாவனைக்காக பொருள்களைக் கொண்டு வருபவர்களிடம் வரி அறவிடுவதில்லை; விற்பனைக்காக பொருள்களை கொண்டு வருபவர்களிடம் மட்டுமே வரி அறவிடப்படுகிறது.

எமது விடுதலைப் போராட்டம் இரண்டு தசாப்தங்களைக் கடந்துவிட்ட நிலையில் எத்தனையோ தீயசக்திகள் எமது விடுதலை இயக்கத்தை அழித்தொழிக்க பல்வேறு நிலைகளில் பல்வேறு இடங்களில் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஆனால், புலிகளை அழிக்க முடியாது. ஏனெனில், புலிகளை அழிக்க வேண்டுமாயின் மக்களை அழிக்க வேண்டும். மக்களில் இருந்து பிறந்ததுதான் புலிகள் - அவர்கள் தான் உயிர்-அது அவர்களுக்கானது. எமக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் எமது தலைவர் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருக்கின்றார். நாம் ஒரு போட்டி அரசியல் அமைப்பல்ல; எமது போராட்டத்தை தலைவர் முன்னெடுத்துக் கொண்டு வழி நடத்திச் செல்கின்றார். அவரது பங்காளிகளாக நாமும் எமது மக்களும் உள்ளோம்.

நீங்கள் எதிர்பார்த்து ஏங்கியிருக்கும் நிம்மதியான வாழ்க்கை எதிர்காலத்தில் நிச்சயம் கிடைக்கும். எமது விடுதலைப் போராட்டம் கெரில்லா யுத்தமாகத்தான் ஆரம்பித்தது. பின்னர் மரபுவழிப் படையாகப் பரிணமித்து; இன்று ஓர் அதிதீவிர மரபு வழிப் படையணியாக மலர்ந்திருக்கின்றது.

இன்றுவரை 17 ஆயிரத்து 656 மாவீரர்களும் 82 ஆயிரம் அப்பாவி மக்களும் உயிர் இழந்துள்ளனர். இந்த நிலையில்தான் எமது சமாதானச் சூழல் மலர்ந்திருக்கின்றது. அது நிச்சயம் வெற்றி பெறும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் இருக்கின்றோம்.

இன்று சிங்கள மக்கள் நாட்டின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் போய்வரலாம். ஆனால், மாவிட்டபுரத்திலே உள்ள ஒருவர் அங்கு போய் இருக்க முடியாது இது தான் எங்களுக்குள்ள பிரச்சினை.

நான் உங்களுக்கு கூறிக்கொள்ள வேண்டிய ஒருவிடயம் உண்டு. எவராவது வரி சம்பந்தமாக ஏதாவது தவறு இடம்பெற்று பாதிக்கப்பட்டிருப்பின் அதை உடனடியாக எமக்குத் தெரியப்படுத்துங்கள். உடனடியாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒன்றை மட்டும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் கூறிக்கொள்கின்றேன். 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்று நாள்தோறும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்ற துரோகக் கும்பல்கள் இந்த மண்ணில் இருந்து வெளியேறத்தான் போகின்றன. அதேநேரம் இந்த இராணுவமும் எமது மண்ணை விட்டு வெளியேறத்தான் போகின்றது - என்றார் இளம்பரிதி. (ஓ-14)

உதயன்

## வேற்றுமையிலும் ஒற்றுமை அதுவே இன்றைய தேவை

நாடு மிக முக்கியமானதொரு கால கட்டத்தைக கடந்து கொண்டிருக்கின்றது.

சுமார் ஐந்து தசாப்த காலம் நாட்டைச் சீரழித்துக் குட்டிச் சுவராக்கிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - இணக்கத் தீர்வு காணும் முக்கிய பரிசோதனைக்கு தம்மை உட்படுத்தியிருக்கின்றார்கள் நமது இனங்களின் தலைவர்கள்.

ஆயுத வழிகொண்டு, கொடூரப் போரில் ஒரு தரப்பை மறுதரப்பு கொன்றொழித்த காலத்தை மறந்து - இரு தரப்புக் கசப்புணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு - பிணக்குக்கு இணக்கத் தீர்வு காணும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

இனத்துக்கு இனம் அடித்துக் கொண்ட கடந்த கால கசப்புகளை அடியோடு மறந்துவிட்டு, தலைவர்கள் ஒருபுறம் ஆற அமர அமர்ந்திருந்து பேச, மறுபுறம் ஓரினத் தலைமைக்குள்ளேயே மோதல்கள் வெடித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி வருவது வேதனைக்குரியது. ஓரினத் தலைவர்களிடையேயான மோதல் என்றாலும் முழுச் சமாதான முயற்சிகளையுமே அது பாதிக்கும் தன்மையுடையது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

முக்கிய மூன்று இனத்தவர்கள் வாழும் நமது நாட்டில் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவரை இரண்டு பெரிய சிங்களக் கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. எப்படியென்றாலும் அவற்றில் ஆளும் தரப்பு என்ற அந்தஸ்தைப் பெறும் கட்சி அமைதி முயற்சிகளில் சிங்களவர்களின் பிரதிநிதித்துவ உரிமையைத் தக்க வைத்துக்கொள்கின்றது. தமிழர் தரப்பு பெரும்பாலும் ஒன்றுபட்டு தங்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை தற்போது சமாதானப் பேச்சுக்கு அனுப்பியுள்ளது.

மூன்றாவது இனம் முஸ்லிம்கள்.

இனப்பிரச்சினை யுத்தமாக வெடித்தபோது அதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் இருதரப்பினர். ஒரு தரப்பு - அரசு, மற்றத் தரப்பு - தமிழர்கள்.

இவர்கள் இரு தரப்பினரும் யுத்தத்தை நிறுத்தி, சமாதான முயற்சிகளில் நேரடியாக ஈடுபட்டாலும், தீர்வுக்கான வழி வகைகளில் முஸ்லிம்களின் பங்கு, பணி குறித்து ஆராயப்படும்போது முஸ்லிம்களும் மூன்றாந்தரப்பாக அழைக்கப்படுவர் என்ற உறுதிமொழி ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது.

இந்த மூன்று தரப்பினருக்கும் ஏற்புடைய இணக்கமான தீர்வு ஒன்று காணப்பட்டாலேயே அது நின்று நிலைத்து நீடிக்க முடியும்.

அத்தகைய இணக்கத் தீர்வு காண்பதற்கு மூன்று இனத் தலைவர்களிடையேயும் விட்டுக் கொடுப்பு உணர்வு தேவைப்படுகின்றது.

அதற்கு மேல், ஒவ்வோர் இனத் தலைவர்களிடையேயும் புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும், ஒற்றுமையும், ஒருமித்த செயற்பாடும் அவசியம். அப்போது தான் தமது இனத்துக்கும் தமது நாட்டுக்கும் நல்லதை ஒரே குரலில் அவர்கள் வாதாடிப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்தகைய சூழ்நிலையில்தான் முஸ்லிம்களின் தலைமை, தாங்களுக்குள் பிய்ச்சல், பிடுங்கலில் இறங்கி ஒற்றுமைப் போக்கை மழுங்கடித்து வருவது பற்றிய செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக அஷ்ரப் இருந்தபோது முஸ்லிம்களுக்கென குரல் எழுப்பும் அதிகாரம் - தார்மீகப் பொறுப்பு - அவரிடம் இருந்தது.

அவரின் மறைவின் பின் முஸ்லிம் காங்கிரஸின் சகோதரக் கட்சியாக இருந்த நுஆ தனிவழி போனது, பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டது. அதிலிருந்து அதாவுல்லா அணி தோன்றியது. இவை தவிர, பெரும்பான்மைக் கட்சிகளான ஐ.தே.க. மற்றும் சு.கவின் கீழ் முஸ்லிம்களின் தலைமைத்துவங்கள் வேறு இருக்கின்றன.

இவ்வாறு பல துண்டுகளாகப் பிளவுபட்டு சிதறுண்டு கிடக்கும் முஸ்லிம்களின் தலைமைத்துவம் தங்களுக்குள் மோதிக்கொள்வது சிறுபான்மையினரான முஸ்லிம்களின் நலனை மட்டும் பாதிப்பதுடன் நின்றுவிடாது. தற்போதைய சமாதான முயற்சிகளில் அவர்களின் சரியான - நியாயமான - பிரசன்னத்தைப் பாதித்து, சமாதான முயற்சிகளின் வெற்றியிலும் பெரும் பின்னடவை அது ஏற்படுத்தி விடக் கூடியது.

எனவே, சகல இனங்களினதும் தலைமைகள் நாட்டின் இந்த இக்கட்டான காலகட்டத்தில் வேற்றுமையிலும் ஒற்றுமை பேண முன்வந்து, அதைச் செயலில் காட்டவும் தயாராக வேண்டும். அதுவே நாட்டுக்கும் நல்லது. தாம் தலைமை வகிக்கும் இனங்களின் நலனுக்கும் நல்லது.

## சமாதான முயற்சிகளை இலங்கை வெற்றிகரமாக மேற்கொள்கிறது!

### தென்னாபிரிக்கப் பிரமுகர் பாராட்டு

கொழும்பு,ஏப்.18

சமாதான முன்னெடுப்புக்களை வெற்றிகரமாக மேற்கொள்வதில் இலங்கை முன்னணியில் திகழ்கின்றது.

- இவ்வாறு தென்னாபிரிக்காவின் முன்னாள் சமாதானத் தூதுவர் றோய்ஸ் மேஜர் பாராட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஆகியோரைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சிறப்பாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது. இது குறித்து சர்வதேச சமூகம் சிறப்பித்துப் பாராட்டி உள்ளது.

1992ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புடன் ஒப்பிடுகையில் சமாதானம் மிகுந்த உயரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது.

அடிப்படை அம்சங்களை வைத்துப் பார்க்கும்போது சமாதானம் மலரும் நாள் விரைவில் வந்துவிடும் என்றே நம்புகின்றேன் - என்றார் அவர்.

இவர் தென்னாபிரிக்க அரசில் பல அமைச்சுப் பதவிகளையும் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-12)

### தொழுவதில் பயன்?

தொழுவ...
வட்டிக்கு வட்டி ...
  வாரமோர் கிடை ய் அடிக்கும்
துட்டனாம் துரைசிங்க னாரோ
  துடுக்கொடு வாழும் போது
பக்தியின் உச்சம் கண்டு
  பலமணி தியானம் செய்து
சுத்த சைவனாய் வாழும்
  சுந்தர மூர்த்தியாரோ
பொல்லாத கொடு நோய் வாட்ட
  பொலி விழந்து வாழ்கின்றாரே
முத்தனே! முதல்வா! நீயும்
  முழுமையாய் இதனைக் கண்டும்
பித்தன் நீ என்பதாலோ?
  பேசாமல் இருக்கின்றாய் ?
ஊழ்வினை வந்துறுத்துமெனில்
  உன்னைத் தொழுவதில் பயன்தான் ஏது?

- விகடகவி.

### மின்சார விநியோகத்துக்கென

## காக்கைதீவு மாதிரிக் கிராமத்துக்கு ஒதுக்கீடு செய்த நிதியை தந்துதவுக!

### மானிப்பாய் பிரதேச சபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.18

காக்கைதீவு மாதிரிக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கென ஒதுக்கீடு செய்த 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை உடன் வருவித்துத் தருமாறுகோரி மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமியைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

காக்கைதீவு மாதிரிக் கிராமத்தில் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்திற்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதிப் பொதுமுகாமையாளர் 5 லட்சத்து 23 ஆயீரம் ரூபாவுக்கான மதிப்பீட்டை வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளருக்கு 2002 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வழங்கியிருந்தார்.

இதன் பிரகாரம் 3 லட்சம் ரூபாவை 'ரான்' அமைப்பிடமிருந்து உடன்பெற்று இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதிப் பொதுமுகாமையாளருக்கு காசோலையாக வழங்கப்பட்டது.

ஆனால், முழுமையான ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்திலேயே- அதாவது மிகுதி 2 லட்சத்து 23 ஆயிரம் ரூபா வழங்கும் பட்சத்திலேயே - வேலைகள் ஆரம்பிக்கப்படும் என பிரதேச சபை நிர்வாகத்திற்கு மின்சாரசபை அறிவித்தது.

இதேசமயம், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மாகாண அபிவிருத்தி நிதியூடாக 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்து அதற்கான கடிதத்தை அனுப்பிவைத்து 3 மாதங்கள் கடந்துவிட்டன.

ஆனால், ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியைக் கூட இதுவரை உள்ளூராட்சி ஆணையாளர் விடுவிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், காக்கைதீவு மாதிரி கிராமம் முழுமையான மின்சாரம் பெறவேண்டுமானால் -

மின்சார சபைக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட நிதிக்கு வேலையை ஆரம்பித்து மிகுதி வேலையை மானிய அடிப்படையில் மேற்கொண்டால் கடற்கரையோரத்தில் ஆண்டாண்டு காலமாக இருளில் இருந்த கிராமம் மின்சாரம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-185)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி,ஏப்.18

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோரின் தொகை அதிகரித்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் ஆயிரத்து 89 பேர் வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆஸ்பத்திரியில் 30 கட்டில்களே நோயாளர்களின் பாவனைக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற வருகின்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் 7 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு மின்சாரம் மூலம் 'நெபுலைசர்' மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வழங்கிய மின்பிறப்பாக்கியின் உதவியுடன் இதற்கான இயந்திரம் மூலம் இந்த மருந்து நோயாளர்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆஸ்பத்திரியில் மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் ஆண்கள் வார்ட்டில் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் நலன்விரும்பி ஒருவர் ஆஸ்பத்திரி வளவில் குழாய்க் கிணறு அமைத்து குடி தண்ணீர் வழங்குவதற்கும் -

மற்றொரு நலன்விரும்பி ஆஸ்பத்திரி வளவில் சேதமடைந்துள்ள குழாய்க் கிணற்றினைப் புனரமைத்து வழங்குவதற்கும் - முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## பளை ஆஸ்பத்திரியில் இடவசதியின்றிச் சிரமம்

தென்மராட்சி,ஏப்.18

பளையில் இயங்கும் ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் 200 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் -

ஆஸ்பத்திரி இயங்கும் தனியார் கட்டடத்தில் போதிய வசதிகள் இல்லாததால் நோயாளர்கள் வெயிலில் மணிக்கணக்கில் காத்திருக்க நேரிடுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கட்டடத்தில் போதிய அறை வசதி இல்லாததால் ஊழியர்கள் சீருடைகளை மாற்றிக் கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் - கூறப்பட்டது.

இந்த ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவு திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பகல் 1.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை இயங்குவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

### நாளை

சித்திரை 6
சனிக்கிழமை
(19.04.2003)
திதி : திருதிகை
மாலை: 6.54 வரை
நட்சத்திரம்: அனுஷம்
பின்னிரவு: 4.03 வரை
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தயக்கத்தை பொறுமை என்று கருதக்கூடாது.



யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகம் இயங்க ஆரம்பித்திருக்கின்ற பொழுதிலும் அந்த வளாகத்துக்குள் இப்பொழுதும் மிதிவெடி அபாயம் இருந்து வருகின்றது. இதனால், இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மிகுந்த அச்சத்துடனேயே சென்று வருகின்றனர்.

திறந்த பல்கலைக்கழக வளாகப் பெயர்ப்பலகைக்கு அருகில் மிதிவெடி அறிவிப்புப் பலகையும் நடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: அற்புதன்)*

# நற்றுணையாவது இறைநாமமே

அல்லல்படும் மக்கள் அக்காலத்தில் யாகம் வளர்த்துத் தம் அல்லலைத் தீர்த்தனர். இக்காலத்தில் இறை நாமத்தைப் பாடியும், ஜெபிப்பதன் மூலமும் ஆண்டவனை வணங்கி தம் இடுக்கண்களைத் தீர்க்கின்றனர். இறைவன் அடியவர்களுக்கு எழியவன் அல்லவா? தன்பெயர் கேட்டவுடன் ஓடி வரும் குழந்தை போலக் தன்நாமம் கேட்டவுடன் ஓடி வா[illegible] என்பதில் சந்தேகமேயில்லை

தன்நாமம் கேட்டவு[illegible] இறைவன் ஓடிவருவான் என்பதைப் புராணங்கள் பல உதாரணங்கள் மூலம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தந்தையைக் காணாத தனயன் "அம்மையே அப்பா" என்று கூறியவுடன் ஞானப்பால் கொடுத்து ஞானக்குழந்தையாக்கிப்

## ஞானக்கதிர்

பாடுவித்தவன் இறைவனன்றோ? நாவுக்கரசர் சூலை நோயால் வருந்தும் போது இறைநாமம் பாடியவுடன் சூலைநோயைத் தீர்த்தவர். அவரைக கல்லில் கட்டி கடலில் போட்டபோது "நற்றுணையாவது நமச்சிவாயவே" என நாவுக்கரசர் பாடியவுடன் கல்லைத் தெப்பமாக மிதக்கவிட்டுக் கரை சேர்த்தவர் இறைவனே.

இராமநாமம் செபித்து அகலிகை சாபம் நீங்கியதும், கடலைக்கடக்க அனுமான் இராமநாமம் செபித்ததும் இராமாயணம் எமக்குக் காட்டும் உதாரணங்களாகும். அது மட்டுமா? அசோகவனத்தில் சீதை தற்கொலை புரியச்



சென்றபோது இராமநாமம் ஒலித்துக் கொண்டு அனுமன் அங்கு வந்ததும் சீதையின் அச்செயல் தடைப்பட்டது.

துச்சாதனன் திரௌபதியின் துகில் உரியும் பொழுது திரௌபதி "கண்ணா - கண்ணா" என்றழைத்தவுடன் கண்ணபிரான் வந்து மானங்காத்தார்.

எங்கும் அறம் மறைந்து மறம் ஓங்கி உலகை ஆட்டுவிக்கின்றது. எங்கும் கொலை, அநீதி, அடக்குமுறை, நான் என்ற ஆணவம், சர்வதிகாரம் என அதர்மம் தலைவிரித்தாடுகின்றது.

"தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி அல்ல அறுத்து ஆனந்தமாக்குவதற்கு நற்றுணையாவது நமச்சிவாயவே"

கையில் மருந்தை வைத்துக் கொண்டு நாம் ஏன் அல்லற்பட வேண்டும்? இறைவனை நினைத்து நெக்குருகி நெகிழ்ந்து பாடினால் இறைவன் எம்மிடம் ஓடிவருவான்.

அல்லறபடும் மக்களின் வாயில் இறைநாமம்தானாகவே வந்துவிடும். பலர் முதற்கடவுளாகவும், தம்குல தெய்வமாகவும் பல தெய்வங்களை வழிபடுகின்றனர்.

பலர் தெய்வத்தின் திருநாமத்தை அப்பியாசக் கொப்பிகளில் நூற்றெட்டுத் தரம் அல்லது ஆயிரத்தெட்டுத் தரம் தினம் எழுதுகின்றனர். உதாரணமாக "ஸ்ரீராமஜெயம்" - "ஓம் சரவணபவ"

**சமூகமணி**
**சி.சி.வரதராசா**

- "நமசி வாய" என்பனபோன்ற வாக்கியங்களை எழுதுகின்றனர். பலர் அவற்றை ஜெபிக்கின்றனர்.

இவ்வகையான காரியங்கள் துன்பமகற்றி இன்பமூட்டுகின்றன. ஆகவே, நம் வாழ்விற்கு இறைநாமம் மிகவும் உறுதுணையானது.

இறைநாமத்தை நாம் எப்பொழுதும் புனிதமாகவும், உள்ளன் போடு பாடி, வழிபட்டு எம் துயர் அகற்றுவோமாக. ★

# கிறிஸ்துவுடன் மரணிப்போம்!

இயேசு எமக்காக தன் உயிரையே கல்வாரி உச்சியிலே அர்ப்பணித்தார். மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியது போன்று மனுமகனும் உயர்த்தப்படவேண்டும் என்னும் முன்னறிவிப்பின்படி மூன்று ஆணிகளில் மும்மணி நேரம் சிலுவையில் தொங்கி வானகத் தந்தைக்குத் தம்மைப் பலியாக்கிய தியாகத்தின் நாளே புனித வெள்ளியாகும்.

நாம் தலை நிமிர்ந்து இறையரசின் பங்காளராக வேண்டும் என்பதற்காக தம் திருத்தலை கவிழ்ந்து இயேசு மரணித்த தூய நாள் இது. அவமானத்தின் சின்னமான சிலுவை எமது பாவ்ஙக செம்மறியான கிறிஸ்து அதன

## தவக்காலச்சிந்தனை
## புனித வெள்ளி

மேல் பலியிடப்பட்டமையால் புனித சின்னமாகப் போற்றி வணங்கத் தொடங்கிய மகிமையின் நாள் இது.

எல்லோரின் பாவங்களையும் தன் தோள் மீது ஏற்று, பொல்லாதோர் வன்செயலை பொறுமையோடு மன்னித்து, சொல்லரிய தம்முயிரை தற்கொடையாய் உவந்து கல்வாரிக் குருசினில் அன்புக் காவியம் படைத்தார் இயேசு.

முப்பது காசுக்காக மாசற்ற இரத்தத்தை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான் யூதாஸ் - இன்று தப்பேதும் செய்யாதோரை சுயநலத்தால் திட்டமிட்டு காட்டிக் கொடுக்கும் நவீன யூதாசுகள் இல்லையா? பிலாத்து கைகழுவி மரணத் தீர்ப்பிட்டு யூதாசிடம் ஒப்படைத்தான் இயேசுவை. இன்று அவனுக்கு அப்படித்தான் நேரவேண்டும்... இவருக்கு, இதுவும் போதாது... நீதான் குற்றவாளி ... என்று தீர்ப்பிடும் பிலாத்துக்கள் நம்மிடையே இல்லையா? தமது பாவச் சிலுவையை பாரச் சிலுவையாக்கி இயேசுவின் தோள்மீது சுமத்தினர்- இன்று எமது குறைகளை, தவறுகளை,



பழிகளை பிறர் மீது சுமத்தும் மனிதர்கள் எத்தனை பேர்?

அன்று மீட்பரை சிலுவையில் அறைந்து கொல்லவேண்டும் என்று கூக்குரலிட்டனர். இன்று அநீதியை, ஆக்கிரமிப்பை, பகைமையை ஆதரித்துக் கோஷங்கள் எழுப்பப்படவில்லையா? சாட்டையால் அடித்து முள்முடியை தலையில் அழுத்தினர் - இன்று எமது சொல், செயலால் பிறரது வாழ்வில் அடித்து மன அழுத்தங்களை உருவாக்கவில்லையா? இறைமகனின் ஆடைகளைக் களைந்து அவமானப்படுத்தினர் - பெண் இனத்தை இம்சைப்படுத்தி, அயலாரை வசைபாடி அவமானப்படுத்தும் நிலைகள் இன்று இல்லையா?

மூவுலகாளும் இறை அரசரை மூன்று ஆணிகளால் அறைந்தனர் - இன்று முழு உலகிலும் குண்டுகள் பொழிந்து மனித உயிர்கள் அழிக்கப்படுகின்றன. தாகமாய் இருக்கின்றேன் என்றபோது இயேசுவுக்கு புளித்த காடியைக் கொடுத்தார்கள் - இன்று ஒருவேளை கஞ்சிக்கு ஒருசாரார் அலைய மூக்குமுட்ட மது அருந்தி சமூகத்தைச் சீரழிப்போர் எம்மில் ஏராளம். இறந்தபின்னும் விலாவினைக் குத்தித் திறந்தனர் - இன்று ஒருவர் மறைந்த பின்பு அவரது பழைய வாழ்வைக் குத்தித் திறந்து தூற்றும் வாய்கள் எத்தனை?

இச்செயற்பாடுகள் அனைத்தும இயேசுவின் அவமானப் பாடுகளையும், சிலுவையின் கனத்தையும், மரணத்தின் கொடூரத்தையும் மென்மேலும் அதிகரிப்பதாகவே அமையும். மாறாகக் கல்வாரிப் பயணத்தில் தடம் பதித்த நற் செயல்களை எமது வாழ்

**எஸ். யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

வில் முன்னெடுத்துச் செயலாற்றுவோம்.

கைது செய்ய வந்தவரின் காது வெட்டப்பட்டபோது அதை மீண்டும் இயேசு பொருத்தியது - பகைவனிடத்திலும் அன்பு காட்டும் செயல். சீரோன் சீமோன் சிலுவை சுமக்க உதவியது - பிறர் சுமையில், துன்பத்தில் பங்கு கொள்வதாகும். ஜெருசலேம் மகளிருக்கு ஆறுதல் கூறியது - பிறர் துயரைப் புரிந்து தேற்றிடும் பண்பாகும். திருமுகத்தைத் துடைத்தபோது துணியில் திருமுகம் பதிந்தது - செய் நன்றிக்கு பிரதியுபகாரம் செய்தலாகும்.

'பிதாவே, இவர்கள் அறியாது செய்கிறார்கள் இவர்களை மன்னியும்' என்றது, எதிரியையும் மன்னிக்கும் மனப்பக்குவம், இறையன்பின் வெளிப்பாடு.

எமக்காக கிறிஸ்து மரணித்த இந்நாளில் மனிதத்திற்கு எதிரான எமது செயற்பாடுகளைக் களைந்து இறை விழுமியத்தின் பாதையிலே பயணிப்போம். எமது பாவங்களுக்குப் பரிகாரமாகக் கிறிஸ்துவுடன் இறப்போம். புதிய மானுடமாய் கிறிஸ்துவோடு உயிர்ப்போம். ★

# அரசு - புலிகள் பேச்சுக்களால் முஸ்லிம்களுக்கு பாதிப்பில்லை

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் பேச்சுகள் முஸ்லிம் மக்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தற்போதைய சமாதான முயற்சிகளின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள மீள் குடியமர்வு உட்படப் பல விடங்களில் முஸ்லிம்கள் மிகுந்த நன்மையடைந்துள்ளனர்.

அத்துடன் முஸ்லிம்கள் தமக்குச் சொந்தமான வயல்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சில் எட்டப்படும் எந்த உடன்பாடும் முஸ்லிம்களின் நலன்களை பாதிக்காத வகையிலேயே அமையும் - என்றார் பீரிஸ். (ஒ-4)

# இரத்மலானை விமானநிலையத்தை வேறிடத்திற்கு மாற்ற யோசனை

கொழும்பு,ஏப்.18

இரத்மலானை விமான நிலையத்தை, மதுகம பல்லே கொட என்ற இடத்துக்கு மாற்றி அமைப்பதற்கு அரசு ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய விமான நிலையத்துக்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் முகமாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான அதிகாரிகள் குழு ஒன்று அங்கு கடந்தவாரம் விஜயம்செய்து இடத்தை பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# தெணியானுக்கு மணிவிழா

கரவெட்டி,ஏப்.18

சிறுகதை எழுத்தாளர் தெணியனுக்கு அவரது சொந்த ஊரான கொற்றாவத்தையில் மணிவிழா நடத்தப்படுகிறது.

இந்த மணிவிழா இன்று வெள்ளிக் கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறகின்றது.

முதலாம் நாள் நிகழ்வில் மலர் வெளியீடு தேவரையாளி இந்துக் கல்லூரிக் கலையரங்கில் காலை 9.00 மணிக்கும், இரண்டாம் நாள் நிகழ்வில் மணிவிழாவும், மலர் அறிமுகமும் மாலை 3.00 மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்திலும் நடைபெறுகின்றன.(ஒ-70)

# படுவான் நோயால் கோழிகளுக்கு ஆபத்து!

கரவெட்டி,ஏப்.18


தற்போது நிலவும் கடும் வெய்யிலின் வெப்பம் தாங்காது கோழிகள் "படுவான்" என்னும் தூக்க நோய் பிடித்து இறக்கின்றன.

வடமராட்சியின் பலபாகங்களிலும் மேற்படி நோயினால் பெருந்தொகையான கோழிகள் தினம் செத்துமடிந்த வண்ணம் உள்ளன. (ஒ-70)

# தெய்வீக ஸ்தலங்களில்



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலின் வருடாந்த தேர் உற்சவம் புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றது. தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுக்கும் காட்சி. (ஐ-180)



கல்வியங்காடு அருள்மிகு வீரபத்திரர் ஆலய தேர் உற்சவத்தின் போது சுவாமி தேரில் ஆரோகணித்து வந்தவேளை, அடியார்கள் கரகாட்டம், காவடி எடுத்து நேர்த்திகளை நிறைவேற்றினர். அவர்களைப் படத்தில் காணலாம். (ஐ-180)



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில், ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு ஒன்றில் லண்டனில் வசிக்கும் செல்வி சியாமினி சிவானந்தன் பக்கவாத்தியம் சகிதம் பாட்டுக் கச்சேரி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (எ-173)

# கிளிநொச்சிப் பகுதியில் விபத்துக்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி,ஏப்.18

ஏ-9 வீதி திறக்கப்பட்டபின்னர் கிளிநொச்சிப் பகுதியில் 72 பாரிய வீதி விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாக கிளிநொச்சி காவல்துறைப் பணிமனை தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்களில் 8 பேர் உயிரழந்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை -

கிளிநொச்சியில் கடந்த வருடத்தைவிட இந்த வருட முற்பகுதியில் அதிகமான விபத்துக்கள் சம்பவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இப்பகுதியில் இடம்பெற்ற 35 விபத்துக்களில் 4 பேர் உயிரிழந்ததுடன் 12 வாகனங்கள் சேதமடைந்தன.

இவ்வருடத்தில் இதுவரை இடம்பெற்ற 37 விபத்துக்களில் 4 உயிரிழப்புகளும் 9 வாகனச்சேதங்களும் ஏற்பட்டுள்ளன எனவும் காவல்துறையினர் தெரிவித்தனர். (ஒ-4)

# சூழல் பிரச்சினைகள் குறித்து ஆராய குழுக்கள் அமைப்பு

## உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுப் பொருள்களால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கென உயர் மட்டக்குழுக்கள் நிறுவப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி மன்றங்களிலும் (பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை) மேற்படி கழிவுப்பொருள்கள் தொடர்பான முகாமையை நெறிப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்குமாக இந்தக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் சபையின் தலைவரை தலைவராகக் கொண்டு பதினொரு பேரை உள்ளடக்கியதாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பதாக இந்தக்குழுக்களை அமைக்கும் என்றும் -

இந்தக்குழுவில், சபை உறுப்பினர் இருவர், உள்ளூராட்சி மன்ற திட்ட அலுவலர் மூவர், அப்பிரதேச பொது மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் இருவர், தொழில்சார் நிபுணர்கள் இருவர், பெண் தரப்பு இருவர் உட்பட 11 பேர் உள்ளடக்கப்படுவர் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் இன்று நிதிப் பற்றாக்குறை, ஏற்புடைய மனிதவளம் இன்மை, இயந்திர சாதனங்கள் இன்மை என்பவற்றுடன் குப்பை கூளங்களின் இறுதி நடவடிக்கைகளுக்கான காணிகள் இல்லாமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் -

இதனால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீவு காணவே மேற்படி குழுக்கள் அமைக்கப்படுகின்றன என்றும் - மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.(எ-185)

# புத்தாண்டுப் பலன் உங்களுக்கு எப்படி?

## மகரம்

(உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம் அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

ஆங்கிலத்திகதிப்படி டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும். மகர ராசி நேயர்களுக்கு இந்த ஆண்டு வெளிநாட்டு விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தில் இருப்போருக்கு பதவி உயர்வு உண்டு.

உங்களுக்கு ஜூலை மாதம் வரை குருபகவான் 7ஆம் இடத்தில் உச்ச ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பல நற்பலன்களை எதிர்பார்க்கலாம். நீங்கள் பெரும் முயற்சி செய்யாதபோதும் வெற்றிகள் தேடி வரும். எளிய வகையில் தன லாபங்கள் கூடும். சுபச் செய்திகளிலும், சுப நிகழ்ச்சிகளிலும் ஈடுபாடு காட்டுவீர்கள். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவும்.

சொத்துக்களை விருத்தி செய்யும் காலமாக இது இருக்கும். சமுதாயம், சபை, சங்கங்களில் அந்தஸ்தும், மரியாதையும், கௌரவமும் ஏற்படும். எந்த வேலையையும் திட்டமிட்டபடி செய்யும் நீங்கள், அடுத்தவர்களுக்கும் வழிகாட்டியாக இருப்பீர்கள்.

சிரமங்கள் இருந்தாலும் இந்த வருடம் உங்கள் எண்ணங்கள் பல நிறைவேறும். இயந்திர சாதனங்களை வியாபாரம் செய்பவர்களுக்கு அவ்வளவு சாதகமாக கால நேரங்கள் இல்லாவிட்டாலும் இறுதியில் வியாபார முன்னேற்றங்கள் ஏற்படும்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு குரு பிரபாவத்தினாலும், சாயாக்கிரகப் பிரபாவத்தினாலும், ராகு கேது பிரபாவத்தினாலும் ஏற்கெனவே நீங்கள் சேமித்து வைத்த பணத்தைச் செலவு செய்ய நேரிடும். வேளை கெட்ட வேளையில் சாப்பிட நேரும். வாத, பித்தக் குறைவுகளும் இருக்கும். ஆயின் கடமையில் கருத்தான நீங்கள், தடுமாற்றங்களைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

நவீன, விசித்திரப் பொருள்களை வாங்கிச் சேகரிப்பதில் ஆர்வம் கூடும். சிலருக்கு புதிய பதவியும் கிடைக்கும். இடமாற்றங்களும் உண்டு. கடந்த காலத்தில் இருந்த நிலைமை மாறி அபிவிருத்தி அடைவீர்கள். பொறுப்புகள் அதிகமாகும். அதனால் சொந்த வேலைகளுக்கு நேரம் ஒதுக்க முடியாது போகும். மகர, கும்ப ராசிக்கு அதிபதியான சனி பகவான் மிதுனத்தில் ஆறாம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் உங்களிடம் மறைந்துள்ள திறமைகள் வெளிப்படும். இந்த சஞ்சார காலம் உங்களுக்கு பொற்காலமென்றே கூறலாம்.

மாணவமணிகளுக்கு ஜூலை வரை சாதகமாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பிரச்சினைகள் நிழல்போல் தொடரும். தற்காலிக அலுவலர்களுக்கும், தாற்காலிக வியாபாரஸ்தர்களுக்கும் இந்தச் சமயம் சாதகமாக இருக்கும்.

மொத்த வியாபாரம் செய்பவர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் தாமதமாகவே பலன்கள் கிடைக்கும். ஆனால் அதேநேரம் வியாபார ஸ்தலத்தில் அபிவிருத்தி ஏற்படும். போக்குவரத்து, நிதி பங்கு வியாபாரிகளுக்கு லாப நஷ்டங்கள் சமமாகவே இருக்கும்.

தகவல் துறையினருக்கும், மளிகை, இரசாயனப் பொருள்கள், மர வியாபாரம், பால்பண்ணை, கோழிப் பண்ணை, மீன் வியாபாரிகளுக்கு ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்கள் சாதகமாக இல்லை.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்துறையினர், அரிசி மில் வியாபாரிகள், சுய வேலை செய்பவர்களுக்கு மே, ஜூன், ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர், மார்ச் மாதங்களில் விசேஷமான லாபங்கள் ஏற்படும். மொத்தத்தில் இவர்களுக்கு ஜூலை மாதத்திற்குப் பிறகு நடுத்தர பலனே கூடி வரும்.

ஜூலை மாத இறுதிக்குள் சுபகாரியங்கள் கூடும். அதன் பிறகு வீடு, மனை வாங்குவது கட்டுவது போன்றவற்றை தள்ளிப்போடுவது நல்லது. அப்போது உடலில் ஆரோக்கியக் குறைவும் ஏற்படும்.

ஏப்ரல், மே மாதங்கள் எல்லாத் துறையினருக்கும் நன்மையாக இருக்கும். ஆதாயம் கூடும். பெரிய மனிதர்கள் தொடர்பு ஏற்படும். ஜூன், ஜூலை மாதத்தில் விவகாரங்களில் தொந்தரவும், முயற்சிகளில் சிரமங்களும் இருந்தாலும் லாபங்களும் இருக்கும்.

வழக்கு விவகாரங்களிலும், வீடு, மனை, சொத்து சம்பந்தப்பட்ட விவகாரங்களையும் ஜூலை மாத இறுதிக்குள் முடித்துக் கொள்வது நல்லது.

பணத்தட்டுப்பாடு ஏதும் இருக்காது. சந்தான சௌக்கியம் கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு ஜூலை மாதத்திற்குள் கல்யாண பாக்கியம் உருவாகும். ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் ஆரோக்கிய குறைவும், வரவுக்கு மீறிய செலவும் இருக்கும்.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் புதிய துறைகளில் லாபங்கள் உண்டாகும். சிலருக்கு கிராம அதிகாரி, பஞ்சாயத்து தலைவர் போன்ற பதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு அரசியலில் ஆர்வம் அதிகரிக்கும். நண்பர்கள் சிநேகிதர்கள் உதவி கிடைக்கும்.

உறவினருடன் குதூகலமாகப் பல பொழுதுகளைக் கழிப்பீர்கள். இந்த ராசி நேயர்கள் ராகு கேதுவுக்ும் சந்திரன், செவ்வாய், குருவுக்கும் ப்ரீதி செய்வது நல்லது. செவ்வாய், வியாழன் விரதமிருப்பதும், சிவனை பூஜிப்பதும் உத்தமம் பெண்கள் வியாழனும், செவ்வாயும் உபவாசம் இருந்து பரமேஸ்வரனையும், ஆஞ்சநேயரையும் வழிபட வேண்டும்.

மஹாலட்சுமிக்கு குங்கும அர்ச்சனை செய்வது கஷ்ட நஷ்டங்களை நீக்கும்; குடும்பத்தில் ஆனந்தத்தைக் கூட்டும்.

8, 3, 4, 6, 9 திகதியுடன் கூடிய திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் இந்த ராசி நேயர்களுக்கு யோககரமான நாள்களாகும்.

## கும்பம்

(அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

ஆங்கிலத்திகதிப்படி 21 ஜனவரி முதல் பெப்ரவரி 19ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்த வருடப் பலன் பொருந்தும்.

கும்ப ராசி நேயர்களுக்கு இந்த வருடம் சரளமான பணப்புழக்கம் இருக்கும். உங்கள் ராசிக்கு ஜூலை மாதம் வரை ஆறாம் இடத்தில் இருக்கும் குரு பகவான், அதன் பிறகு 7ஆம் இடத்தில் பிரவேசிக்கிறார்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு நினைத்த வேலைகள் எல்லாவற்றிலும் வெற்றி உண்டு. அதே நேரம் உங்கள் எதிராளிகள் மீது ஒரு கண் வைத்திருங்கள். உங்கள் தேவைக்குப் பணம் புரட்ட நீங்கள் சம்பந்தப்பட்டவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் சாதகமான பதிலையே பெறுவீர்கள். எதிர்காலத்துக்கான திட்டங்களைச் செயற்படுத்தி நிறைவேற்ற, இந்த வருடம் ஏற்புடையது. உடல் ஆரோக்கியத்திற்காகவோ அல்லது வசதி வாய்ப்புக்காகவோ இடமாற்றம் செய்வதென்றாலும் செய்யலாம்.

ராகு, கேது பிரபாவத்தினால் மனதில் உற்சாகமும், குடும்பத்தில் குதூகலமும் நிலவும். புதிய பொருள்களை வாங்குவது, கொள்முதல் விற்பனை போன்றவற்றில் லாபம், உழைப்புக்கேற்ற பலன் போன்றவை இந்த வருடத்தின் முக்கிய அம்சங்கள். சிலருக்கு பூமி, மனை, வாகன யோகங்கள் உண்டாகும். வரவேண்டிய பணமும் பொருள்களும் அதிகப் பிரயாசையின்றி வரும். சிலர் வெளிநாட்டுப் பயணம் செல்ல நேரிடும்.

அதேநேரம் செவ்வாய் சஞ்சாரமும், சனி சஞ்சாரமும் உங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதை மறந்து விடாதீர்கள். இதனால், மனதில் சற்று கவலைகள் இருந்தாலும் அவை வெளியே தெரியாமல் சமாளித்து விடுவீர்கள். வருட முற்பகுதியில் சுப காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் கச்சிதமாக நிறைவேறும்.

மாணவர்களுக்கு இந்த வருடம் பிரகாசமானது என்றே கூறலாம். எல்லாத்துறையில் உள்ள உத்தியோகஸ்தர், அதிகாரிகளுக்கு பொதுவாக இடமாற்றம் தென்படுகிறது. இதனால் கடந்த காலங்களில் இருந்த பிரச்சினைகள் தீரும். வருமானம் அதிகரிக்கும்.

உங்களுக்கு இவ்வருடத்தில் கூட்டு வியாபாரத்தில் அதிக ஆதாயம் இல்லை. சுய தொழிலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்துறையினர், கலைத் துறையினருக்கு ஏப்ரல், மே, ஜூன், ஒக்ரோபர், நவம்பர், பெப்ரவரி, மார்ச் மாதங்கள் ஏராளமான சுப பலன்களைக் கொடுக்கும். உழைப்புக்கேற்ற பலனும் கிடைக்கும்.

மளிகை, புகையிலை, பேப்பர், மர வியாபாரம் போன்றவை ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு நல்ல பலன்களைத் தரும். நிதி, ஜவுளி, பங்கு , வியாபாரம், ஒப்பந்தகாரர் இரசாயனப் பொருள் வியாபாரிகளுக்கு ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களும், புது வருட ஆரம்ப காலமும், இறுதியும் நடுத்தரமானதாகவே இருக்கும்.

ஆயின் இவ்வருடம் செய்யும் புதிய முதலீடுகளும், வியாபாரத் தொடக்கங்களும் வரும் காலத்தில் முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லும். விவசாயிகள் சாதகமான பலனை எதிர்பார்க்கலாம்.

பங்கு, வியாபாரம் சமமான பலனையே தரும். ஆனால் பொதுவாக இந்த வருடம் அபிவிருத்திக்கு மேல் அபிவிருத்தியே தென்படுகிறது. மீன் வளர்ப்பு, கோழிப்பண்ணை போன்றவற்றிலும் நல்ல பலனையே எதிர்பார்க்கலாம்.

ஏப்ரல், மே மாதத்தில் பிரயாணங்களும், சற்று ஆரோக்கியக் குறைவும், வேலை தடுமாற்றமும் உண்டாகும். சகோதர சகோதரிகளிடையே கோபதாபமும் ஏற்படலாம். ஆனால், பணக்கஷ்டம் வராது.

ஜூன், ஜூலை மாதத்தில் தொண்டை, வயிற்று பாகத்தில் பாதிப்பு உண்டு. பூமி, மனை வாங்கும் போது சற்று எச்சரிக்கையும் தேவைப்படும். அனுகூல சத்ருக்கள் பக்கத்திலேயே இருப்பார்கள்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதம் இந்த ராசி நேயர்கள் மட்டும் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். வியாபாரத்தில் லாபம், தொழிலில் உற்சாகம் போன்றவற்றை அனுபவிப்பார்கள். இந்த வருட இறுதியில் டிசெம்பர் மாதத்தில் மேலும் ஆனந்தகரமான பாக்கியங்கள் உருவாகும்.

நீங்கள் அங்காரகனுக்கும், குருவுக்கும், சுக்ரனுக்கும் அர்ச்சனை செய்வது உத்தமம். சிவாலயத்தில் ருத்ராபிஷேகமும், துர்க்கா ஆராதனையும், தத்தாத்ரேய பூஜையும், லட்சுமி கணபதி பூஜையும், லலிதா சகஸ்ரநாம பாராயணமும் செய்வது அதிர்ஷ்டங்களை வளர்க்கும்.

பெண்கள் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பதும் நல்லது. லலிதா, விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணமும், சூர்ய ஆராதனையும் செய்து வந்தால் குடும்பத்தில் கடன் தொல்லைகள் தீரும். ஷேமம் ஏற்படும்.

1, 3, 4, 6, 9 இந்தத் திகதியுடன் கூடி வரும் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் இந்த ராசிக்காரர்களுக்கு பெரும் யோகத்தை கொடுக்கும் நாள்களாகும்.

## மீனம்

(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி ரேவதி முடிய)

இந்த ஆண்டு தொடக்கத்தில் சனி பகவானும் ராகுவும் 3ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளை தந்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக பொருளாதார வளத்தை கொடுத்து எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க உதவுகிறார்கள். மேலும் 5ஆம் இடத்தில் இருக்கும் குரு குடும்பத்தில் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தந்து கொண்டிருக்கிறார். இந்த நிலையில் வருகிற மே மாதம் 22ஆம் திகதி சனி 4ஆம் இடத்திற்கு செல்கிறார். இது சுமாரான நிலையே. அதன் பின் சனியால் நற்பலனை கொடுக்க முடியாது.

குடும்பத்தில் வீண் விரோதத்தை கொடுப்பார். சனி சாதகமற்ற நிலைக்கு சென்றாலும் அவரது 3ஆம் இடத்தை பார்வை சிறப்பாக அமையும். அதனால் பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். குரு ஜூலை மாதம் 23ஆம்திகதி 6ஆம் இடத்திற்கு செல்கிறார். அதன் பின் அவராலும் நன்மை தரமுடியாது. ஆனால் அவரின் 9ஆம் இடத்து பார்வை சாதகமாக அமையும். ராகு, கேது ஓகஸ்ட் 16ஆம்திகதி இடம் மாறுகிறார்கள். அப்போது ராகு 3இல் இருந்து 4ஆம் இடத்திற்கு வந்த பின் அவரால் நன்மை தர முடியாது. கேது தற்போதுள்ள இடமும் அவர் போகப் போகும் இடமும் திருப்தியற்ற நிலையே. ஆண்டு தொடக்கத்தில் குருவாலும் பிற்பகுதி சனியின் பார்வையாலும் நன்மைகள் கிடைக்கப்பெற்று முன்னேற்றம் காணலாம். தொடக்க காலத்தில் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். மே மாதத்திற்கு பிறகு உங்களின் முயற்சிக்கு தடைகள் வந்தாலும் அதை உங்கள் அனுசரணையான போக்கால் முறியடித்து வெற்றியை காண்பீர்கள். பொருளாதார வளம் இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்புமரியாதை சிறப்பாக இருக்கும். செல்வாக்கு உயரும். ஜூலை முதல் வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். இந்த காலத்தில் அதிக செலவு ஏற்படும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் நீடிக்கும். கணவன்மனைவி இடையே அன்பு பெருகும். வீட்டிற்கு தேவையான சகலவசதிகளையும் பெறுவீர். சிலர் சற்று முயற்சி எடுத்து புதிய வீடு கட்டுவர். அல்லது தற்போது இருப்பதைவிட வசதியான வீட்டிற்கு குடிபுகுவர். திருமணம் கைகூடும். அது நல்லவரனாகவும் அமையும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஜூலை மாதத்துக்கு பிறகு குடும்பத்தில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்து போகலாம். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போகவேண்டும். சிலர் வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிய வேண்டியிருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்வுகள் கூட தள்ளி போகலாம். உத்தியோகஸ்தர்கள் ஆண்டின் தொடக்கத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வுக்கு தடையேதும் இல்லை. கோரிக்கைகள் நிறைவேறும். ஜூலைக்கு பிறகு இந்த அளவுக்கு நற்பலன்கள் இருக்காது. ஆனாலும் பிற்போக்கான நிலையும் இருக்காது. உழைப்பு அதிகரிக்கும்.

உழைப்புக்கு ஏற்ற வருமானமும் இல்லாமல் போகலாம். சிலர் முயற்சி எடுத்து கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். எந்த பிரச்சினையையும் குருவின் பார்வையால் முறியடிக்கும் வல்லமையை பெறுவீர்கள். வியாபாரம் ஆண்டின் தொடக்கத்தில் சிறப்பாக இருக்கும். புதிய வியாபாரத்தை தொடங்க நினைப்பவர்களும் தொழிலை விரிவுபடுத்த நினைப்பவர்களும் மே மாதத்திற்குள் செயல்படுத்தவும். அதன் பின் அவ்வளவு அனுகூலமான போக்கு இருக்காது. அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். எந்த வேலையையும் அதிக முயற்சி எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். ஆனாலும் சனியின் பார்வையால் பணப்புழக்கத்திற்கு எந்த குறையும் இருக்காது. புதிய வியாபாரம் தொடங்க நினைப்பவர்கள் அதிக முதலீட்டை போட வேண்டாம். கலைஞர்கள், அரசியல்வாதிகள் நல்ல வளர்ச்சி காண்பர்.

ஆண்டின் தொடக்கத்தில் புகழ், பாராட்டு போன்றவை கிடைக்கும். ஜூலைக்கு பிறகு புதிய ஒப்பந்தத்திற்காக சற்று முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். அப்போது உங்களுக்கு வரவேண்டிய புகழ், பாராட்டு தட்டிப் பறிக்கப்படலாம். ஆனால், பணப்புழக்கத்தில் எந்த பின் தங்கிய நிலையும் வராது. மாணவர்கள் தற்போது சிறப்பான பலனை பெறலாம். பலருக்கு வெற்றி கிட்டும். மதிப்பெண் கூடுதலாக கிடைக்கும். மேல் படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். ஆனால், அடுத்த கல்வி ஆண்டு சுமாராகவே இருக்கும். அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்கு தகுந்த முன்னேற்றம் காணலாம். ஆசிரியர்கள் சொல்படி நடப்பதே நல்லது. விவசாயத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். அதிகமாக உழைக்கும் நிலை உருவாகும். புதிய சொத்து வாங்க அதிக முயற்சி எடுக்க வேண்டும். வழக்கு விவகாரங்கள் ஆண்டின் தொடக்கத்தில் சாதகமாக இருக்கும். தீர்ப்பு உங்கள் பக்கம் அமையலாம். கைவிட்டு போன பொருள்கள் மீண்டும் கிடைக்கும். ஜூலை மாதத்தில் இருந்து வழக்குகள் சாதகமாக அமைய வாய்ப்புகள் இல்லை. புதிய வழக்கு எதிலும் சிக்க வேண்டாம். பெண்கள் குதூகலமான பலனை காண்பர். கணவரின் அன்பு கிடைக்கும். உங்கள் மூலம் குடும்பம் சிறக்கும். புத்தாடை, அணிகலன்கள் வாங்குவீர். விருந்து விழா என சென்று வருவீர்கள்.

பிள்ளை வளர்ப்பில் பெருமை அடைவீர்கள். ஜூலை முதல் கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போகவும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். ஜூலைக்கு பிறகு பித்தம், மயக்கம், இருமல், சளி தொடர்பான இடர்பாடுகள் அவ்வப்போது வரலாம். இந்த நோய் அறிகுறி வந்தால் உடனே சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

நன்றி:தினமணி

# உயர் தொழில்நுட்பவியல்

அமெரிக்கா, சிலிக்கன் வலியில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று வடகிழக்கில் வாழும் மக்களுக்காக ஓர் உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது. அந்நிறுவனத்தின் திட்டத்தின்படி ஆரம்பத்தில் கிளிநொச்சி நகரில் இப்பாடசாலை, ஒரு தற்காலிக வளாகம் ஒன்றில் அமைக்கப்படவுள்ளது. இப்பாடசாலை பல்கலைக்கழக /தொழிற்சாலை ரக போதனைகளை மேற்கொள்ளவுள்ளது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களினதும் அவர்களது நண்பர்களினதும் திறமைகளும் ஆற்றல்களும் இப்பாடசாலையூடாக வடகிழக்கு மக்களிற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

**பின்வரும் போதனைப் பகுதிகள் வழங்கப்படவுள்ளன.**

1. Database Application Development
2. Web Based Application Development
3. Computer Networking and Communications
4. Electronics

தூர இடத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளைக் கொண்ட வளாகத்தில் இப்பாடசாலை மே மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் தமது மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபடும்.

60 மாணவர்களுக்கு முதல் பிரிவில் இடம் கொடுக்கப்பட்டு போதனைகள் ஆங்கிலத்தில் 09 மாதங்கள் நடைபெறும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 02 வருடங்கள் நிறுவனத்தின் கீழ் வேலை செய்யும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பல்கலைக்கழக பட்டதாரிகளும், கணனியில் ஏற்கனவே அனுபவம் உள்ளவர்களும் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஆர்வம் கொண்டவர்களும், கணனித்துறையில் தொழில் புரிய விரும்புபவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித்தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

1. கணிதம், விஞ்ஞானம், வணிகம் சம்பந்தமான நெறியில் பல்கலைக்கழக பட்டப்படிப்பு

அல்லது

2. க.பொ.த. (உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியும், க.பொ.த. (சா/த) இல் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும். (போரினால் இடம்பெயர்ந்து உ/த பரீட்சைக்கு தோற்றாதவர்களும் விண்ணப்பிக்கலாம்) தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பரீட்சை ஒன்றிலும் நேர்முகப் பரீட்சை ஒன்றிலும் தோற்ற வேண்டும்

இக்கற்கை நெறியைப் பூர்த்திசெய்வதற்கான (09 மாதம்) கட்டணமாக ரூபா 7,500.00 அறவிடப்படும். (பகுதி கட்டணமாகச் செலுத்தலாம்)

சில தகுதிபெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும், கடனுதவிகளும் வழங்கப்படும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Office of Admission for Technology Education**
**C/O Kamathenu Lodge, Killinochchi.**

பின்வரும் தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**Registrar, Accountant, Lecturers.**

விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
**Employment for Technology Education**
**C/O Kamathenu Lodge, Killinochchi.**

## Student Admission Application Form - 2003

1. Name:.............................................. 2. Father's Name..............................
3. Mailing Address:..............................................................................
4. Permanent Address:..........................................................................
5. Date of Birth:................................6. Gender:..........................................
7. Academic Qualifications:

*Provide photo - copies of all certificates and related documents. For university study, list subjects (including Lab work), grades and honors program for every year.*

| Examinations / Programs | Name of Institution | Name of Degree /Certification | Start, End Dates | Subjects | Grades |
|---|---|---|---|---|---|
| University (Program of Study) | | | | | |
| All other Programs of Study *(List individually)* | | | | | |
| G.C.E.A/L | | | | | |
| G.C.E.O/L | | | | | |

8.Work Experience *(List all experiences related to Business, Industrial and Teaching)*

| Position at Employment | Responsibilities & Accomplishments | Name of Institution | Start, End Dates |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9.Other Skills
*(Describe in detail all activities relating to Management, Leadership, Public Service, School - Prefect, Team Captain, other Technical expertise etc.)*

10. To the best of my knowledge all information provided above are truthful and any misrepresentation of information or furnishing of false documents will disqualify my opportunity to be selected as a student. If it is discovered during my studies that I have willfully provided incorrect information, I will be expelled from institute, and if discovered after my studies, my certification will be revoked.

Signature.............................. (16890) Date...............................


**கைதடி நாவற்குழி தெற்கு**
**பெரும்படை அம்மன் கோயில்**
**வருடாந்த பெரும் பொங்கல்**

**18.04.2003 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காவடியும் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகளும், மகேஸ்வரப் பூசையும் அதனைத் தொடர்ந்து பொங்கலும் நடைபெற்று சனிக்கிழமை (19.04.2003) காலை 5 மணிக்கு விழா இனிதே நிறைவேறும். அடியார்கள் அனைவரும் அம்பாளின் ஆசியைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

கைதடி நாவற்குழி தெற்கு. (16895) **ஆலய பரிபாலன சபையினர்.**

# மாபெரும் மலிவு விற்பனை

ஈஸ்ரர் பண்டிகையை முன்னிட்டு
எமது மலிவு விற்பனை
20-04-2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**சகல வகையான புடைவைகளையும்**
**விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:**

# லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/27425)


# நெஞ்சம் விட்டகலா நினைவலைகளில்
## நான்காம் ஆண்டு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 02 - 1937 |  | 02 - 05 - 1999 |

## அமரர் செல்லத்துரை பாலசிங்கம் (சிங்கர்)

(பெட்டா எசன்ஸ் சப்பிளேயர்ஸ்)

திதி: துதியை 18-04-2003

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரியங் காட்டிலே கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தவர்கள் நாங்கள் அல்லர்!
என்றும் எங்கள் உள்ளத்தில் உங்கள் நிழல் ஆடும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (16885)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகையா சிவபாதநாயகி

பாலனைப்பு, தூர்க்காபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி முருகையா சிவபாதநாயகி அவர்கள் நேற்று 17.04.2003 காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் (விதானையார்) பொன்னம்பலம் முருகையாவின் அன்பு மனைவியும் நடராசா திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான முருகையா, செல்வநாயகி, கனகசபை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வள்ளிஆச்சி அம்மா, திலகவதி, சிவபாக்கியம், முருகையா, நிமலாதேவி, நடேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 17-04-2003 மாலை தெல்லிப்பழையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பாலனைப்பு,
தூர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (16887)

பொ. முருகையா (கணவர்),
தர்மரத்தினம் (மருமகன்)
(றோசர் கொல்லங்கலட்டி)

## ஜோர்ஜ் வின்சன் (சுரேஸ்)

செம்பியன்பற்று வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டவரான ஜோர்ஜ் வின்சன் (சுரேஸ்) 12.04.2003 சனிக்கிழமை இந்தியாவில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் பவுலீனப்பு - ஜெஜினம்மா ஆகியோரின் அன்பு மகனும் வரப்பிரகாசம் அவர்களின் அன்புப் பேரனும் செலஸ்ரின், பொஸ்கோ (இத்தாலி), ரூபி, லக்கு, அமுத (இத்தாலி), அழகி, வசந்தி (இத்தாலி), ரமேஸ் (லண்டன்), ஜெசில் (இத்தாலி), பிறேம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியபுஸ்பம், அரியம் (இத்தாலி), செலின் (இத்தாலி), சின்றாசா (இத்தாலி), ஒப்பிலியா (லண்டன்), துரை, இதயராஜ் (இத்தாலி), சுறேஸ்(இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் றொய்சலா, ரமேஸ், றேஞ்சன், அனுசியா, றொசானி, ஸ்ரெபிக்கா, றொமினா (இத்தாலி), ஸ்ரெபான், ஸ்ரெபானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஸ்ரெலா அஞ்சலெக்ஸ், யூட்(லண்டன்), மொடஸ்ரா, லொயிற்சன்(இத்தாலி), மெல்வின், விவேக்ஸ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.04.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செம்பியன்பற்று வடக்கு,
தாளையடி. (16889)

பவுலீனப்பு
(செல்லத்துரை - தந்தை)

# வழக்குகளை விரைவுபடுத்த பொலீஸார் விசேட அக்கறை

## உயர் அதிகாரிகள் உத்தரவாதம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

நீதிவான் நீதிமன்றங்களில் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் குற்றச் செயல்கள் சம்பந்தமான வழக்குகளை தேவையற்ற காலதாமதமின்றி விரைவாக நடத்தி முடிப்பதற்கு பொலீஸ தரப்பில் விசேட அக்கறை எடுக்கப்படும் என உயர் பொலீஸ் அதிகாரிகள் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற நீதிவான்கள் - பொலீஸார் இடையேயான கலந்துரையாடலிலேயே இந்த உத்தரவாதத்தை பொலீஸ் அதிகாரிகள் வழங்கினர்.

இது தொடர்பாக யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்ததாவது:-

நீதிமன்றங்களில் பிறப்பிக்கப்படும் அழைப்புக்கட்டளை, பிடியாணை என்பவற்றை விரைவில் பொலீஸார் செயற்படுத்துவதற்கு ஏதுவாக குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக வாகனங்கள் விநியோகிக்கப்பட இருப்பதாக உயர பொலீஸ் அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

நீதவான்களினால் கட்டளையிடப்படும் மரணவிசாரணையின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் பிரேத பரிசோதனை சம்பந்தமாக இறந்தவர்களுடைய உறவினர்களின் நலன்களைக கருத்தில் கொண்டு சில அவசர நடவடிக்கை எடுப்பதற்காக விரைவில நீதிவான்கள், உயர் பொலீஸ் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரிகள் அடங்கிய ஓர் கூட்டம் நடத்தப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திலும் யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றத்திலும் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கட்சிக்காரர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பொலீஸாருக்கும் எதுவித அசௌகரியங்களும் ஏற்படாது தடுப்பதற்கு எதிர்வரும் 21 ஆம் திகதிமுதல புதிய நடைமுறை செயற்படுத்தப்படும்.

அதன்படி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் திங்கள், புதன்கிழமைகளிலும் -

கோப்பாய், அச்சுவேலிப் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் புதன்கிழமைகளிலும் -

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் (மேல்மாடியில்) யாழ்ப்பாணம் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் செவ்வாய்க் கிழமைகளிலும் -

கோப்பாய் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் வியாழக்கிழமைகளிலும் - நடவடிக்கை எடுத்துக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதிவான் தெரிவித்தார். (ஒ-5-10)

# குப்பி விளக்கை அருகே வைத்தபடி பெற்றோல் ஊற்றியதில் விபத்து!

யாழ்ப்பாணம்,ஏப்.18

குப்பி விளக்கை அருகில் வைத்துக்கொண்டு பெற்றோலை கையாண்ட போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சில தினங்கள் முன்பாக கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னப்பொடி கந்தசாமி (வயது 53) என்பவரே எரிகாயங்களுக்குள்ளானார்.

குப்பி விளக்கை கொளுத்தி அருகே வைத்துக்கொண்டு கொள்கலன் ஒன்றிலிருந்து பெற்றோலை மற்றொரு கொள்கலனுக்குள் இவர் ஊற்றிய போது, குப்பி விளக்கின் நெருப்பு காரணமாக பெற்றோல் தீப்பிடித்ததாகவும் -

இதிலேயே இந்த நபர் எரிகாயங்களுக்கு உள்ளானதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து காயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-15)

# குருநகர் வீதிகளை திருத்தக் கோரி மகஜர் கையளிப்பு

குருநகர்,ஏப்.18

குருநகரில் சேதமடைந்துள்ள வீதிகளை உடனடியாகத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு மகஜர் மூலம் கோரியுள்ளது.

குருநகர் ஐஸ் தொழிற்சாலை வீதி, குருநகர் 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள், சென்ஜேம்ஸ் வீதி கிழக்கு மேற்கு வீதிகள், தண்ணீர் தாங்கி 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் குறுக்கு வீதிகள், புதுமைமாதா கோவில் கிழக்கு மேற்கு வீதிகள், அடப்பன் வீதி, ஓடக்கரை வீதியின் சில பகுதிகள், யாழ்ப்பாண நான்காம குறுக்கு வீதி ஆகியவை படுமோசமான நிலையில் உள்ளதாக இம் மகஜரில சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ-51)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலீஸாருக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்!

## உதவி அத்தியட்சகர் கோரிக்கை

செம்பியன்பற்று,ஏப்.18

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் பொலீஸாருக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் வடமராட்சி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டி.பிரேமரட்ண.

பருத்தித்துறை பொலீஸார் தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்தை முனனிட்டு நடத்திய வடமராட்சியிலுள்ள கழகங்களிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ் விளையாட்டுப் போட்டி பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில பருத்தித்துறை பொலீஸ் இன்ஸ்பெக்டர் கே.சி.ஹப்பு ஆராய்ச்சி தலைமையில் நடைபெற்றது.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தொடர்ந்து கூறியதாவது:-

பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு வளர்க்கப்படவேண்டும். அண்மையில் நடந்த யுத்த நடவடிக்கையால் பொலீஸ் - பொதுமக்கள் நல்லுறவு பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வேளையில், பொலீஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு வளர்க்கப்படவேண்டும்.

யுத்த அனர்த்தங்களால் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள். மக்கள் இன்று சமாதானத்தையே விரும்புகிறார்கள். பொதுமக்களைப் பாதுகாப்பதுடன் அத்தோடு, குற்றவாளிகளை நல்வழிப படுத்தி அவர்களை நல்ல வாழ்க்கை வாழச்செய்ய வேண்டியதும் பொலீஸாரின் பணியாகும். பொலீஸார் பொது மக்களின் பாதுகாவலர்கள்.

நீண்டகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, சமாதானம் நிலைபெறுவது அனைவருக்கும் மிகவும் சந்தோசமான நிகழ்வாகும் என்றார் அவர்.

இவ்வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வல்வை மாவட்ட வைத்தியசாலை மருத்துவர் கே.மயிலேறும் பெருமாள், பருத்தித்துறைப் போக்குவரத்துச்சாலை முகாமையாளர் எஸ்.கமலநாதன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன், வடமராட்சி உதவி கல்விப் பணிப்பாளர் எம்.சிறீபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-36)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3563312 இருந்து 3579211 வரை
சீட்டிழுப்பு இல. 1392
திகதி 12.04.2003

வெற்றி எண்கள்
16 20 34 37 46

போனஸ் எண்
11

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 105 | 10,000/- | 1,050,000/- |
| 3 | 5,013 | 500/- | 2,506,500/- |
| 2 | 83,313 | 20/- | 1,666,260/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 16ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 101,827 | 10/- | 1,018,270/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,241,030/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.2,287,350/-

தொடர் இல. 3579212க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 19ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3572631-5-80
3565188-5-68
3569407-6-78
3564778-2-86
3574551-3-09


அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 07 - 03 - 1933 | | 19 - 03 - 2003 |



## அமரர் செல்லப்பா பரமானந்தம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.04.2003) வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் நாளை (19.04.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*54 / 12,சந்தானமாத முன் ஒழுங்கை,*
*பாண்டியன் தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.*

(16853) - குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 11 ~ 08 ~ 1941 | | 18 ~ 03 ~ 2003 |



அமரர்

## சின்னத்தம்பி செல்லத்துரை

அன்புள்ள அப்பாவாய் அறிவுரைக்கும்
ஆசானாய், எம்மை ஆளாக்கிய தந்தையே!
இன்பம் அனைத்தும் நாம் வென்று, வாழ்வில்
ஈடேறவைத்த எம் அன்புத் தெய்வமே!
உள்ளத்தில் உம் நினைவலைகள்
ஊற்றாகி அருவியாய் உருகியோட
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
ஏனையா ஈசனடி காண விரைந்தாய்?
ஐயாறு நாள்கள் ஆனாலும் எம் மனதில்
ஆறாது சோகம்! அகலாது உங்கள் நினைவு!

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

(16737) - குடும்பத்தினர்.

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட பரிசளிப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கௌரவிக்கப்படும் கூடைப் பந்தாட்ட வீரர்களின் விவரம் வருமாறு:-

**சிறந்த வீரர்கள்**

என்.சாந்தகுணாகரன் (யாழ். பல்கலைக்கழகம்), எஸ்.பிரசன்னா (யா/ மத்திய கல்லூரி).

**சிறந்த வீரங்கனைகள்**

சி.குகாஜினி (யாழ்.பல்கலைக்கழகம்), இ.வினோஜா (கொக்குவில் இந்துக கல்லூரி).-

சிறப்பு விருதினைப் பெற்றவர் என்.சாந்த குணாகரன் (யாழ்பல்கலைக் கழகம்). (ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.18

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிசுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழகமும் விளையாட உள்ளன. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

முதலில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 14 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதின. இதில் மகாஜனாக் கல்லூரி அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி 19.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இவ்விரு அணிகளுக்குமான இறுதி ஆட்டம் இன்று வெள்ளிக் கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.18

புதுவருடத்தையொட்டி இளவாலை பொலீஸ் நிலையத்தில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

இளவாலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சிரேஷ்ட அத்தியட்சகர் ஹரல் அன்ரனி கலந்து கொண்டார்.

இதில் பாரம்பரிய விளையாட்டுக்களான முட்டி உடைத்தல், தலையணிச்சண்டை, கிறிஸ்கம்பம் ஏறுதல், மற்றும் கழகங்களுக்கிடையேயான கயிறு இழுத்தல், பலூன் உடைத்தல், 100 மீற்றர் ஓட்டம் என்பனவும் மரதன் ஓட்டம், சைக்களிள் ஓட்டம் ஆகியனவும் இடம்பெற்றன. (ஒ-5-48)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ்.மாவட்டப் பிரதேசங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஆண்களுக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ முற்பகல் 8.30 மணிக்கு - யாழ்ப்பாண பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

★ உடுவில் பிரதேச அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

★ கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.

★ நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு.

★ மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.

★ பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலக அணிகள் இரண்டாம் சுற்றில் இருந்து விளையாடவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக கூடைப் பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்கள் பிரிவில் பங்குபற்றும் கழகங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 7.30 மணி - உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்.

காலை 8.30 மணி - உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் பற்றிசியன் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 4.00 மணி - சென்றலைற் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.பல்கலைக்கழகம்.

பிற்பகல் 5.00 மணி - ஒல்ட் கோல்ட் விளையாட்டுக்கழகம் எதிர் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

பெண்களுக்கான போட்டியில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு :-

காலை 7.30 மணி - யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

காலை 8.30 மணி - கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 4.00 மணி - பட்டபிணை விளையாட்டுக்கழகம் எதிர் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

பிற்பகல் 5.00 மணி - பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யுத்காமல் விளையாட்டுக் கழகம். (ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.18

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (ஒ-5-86)

# பாடசாலை அணிகளுக்கிடையேயான கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற மாவட்ட மட்டக் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமி.கல்லூரி , இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் மற்றும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆகியன முறையே 15, 17 மற்றும் 19 வயதுப் பிரிவுகளில் இவ்வாண்டுக்கான சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இறுதியாட்டங்கள் அனைத்தும் நேற்று சட்டநாதர் கோயிலுக்கண்மையிலுள்ள யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்க விளையாட்டுத் திடலில் நடைபெற்றன.

முதலில் நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி அதனை எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை 3-0 என்ற 'செற்' கணக்கில் வென்று சம்பியனாகியது.

இப்பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் மூன்றாவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து நடைபெற்ற 17 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும், ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயமும் மோதின.

இதில் இளவாலை மெய்கண்டான வித்தியாலயம் 3-1 என்ற செற் கணககில் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தைத் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப்பிரிவில் அருணோதயா கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

இறுதியாக நடைபெற்ற 19 வயதுப பிரிவினர்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியும், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அணி 3-2 என்ற செற்கணக்கில் வென்றது.

இதில் மூன்றாம் இடத்தினை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பெற்றது. (ஒ-5)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளமும், பயிற்சியும்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கும்

யாழ்மாவட்டத்தில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதறகு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து மேற்படி கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் முன்பள்ளிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படடு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், புதிதாக முன்பள்ளிகள் அமைத்தல், புதிதாக ஆசிரியர்களை நியமனம் செய்தல் என்பவற்றில் முன்பள்ளி செயற்றிட்டக் கல்வியில் ஒன்றிணைவுத் தன்மையிலிருந்து விலகிச்செல்லும் நிலை காணப் படுகின்றது. இதனால், தேவையான பகுதிகளில் புதிய முன்பள்ளிகள் அமைப்பதில் சிரமம் எதிர்கொள்ளப் படுகின்றது.

எனவே, புதிதாக முன்பள்ளிகள் தேவைப்படும் போது முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்று, கல்விச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்கவும்-

யாழ்.மாவட்ட மட்டத்தில் கொத்தணி, பிரதேசம், வலயமட்டத்தில் முன்பள்ளிவிருத்திக்கான குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் மாவட்ட மட்ட செயற்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கலைத்திட்டங்கள் என்பவற்றை எதிர்கால கல்வித் தேவைக்கேற்ற வகையில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன், முன்பள்ளி செயற்றிட்டத்தினை மேற்பார்வை செய்வதற்கென பிரதேச செயலா பிரிவு ரீதியாக இணைப்பாளர்கள் நியமனம் செய்யப்படடு செயலாற்றி வருகின்றனர். வலய மட்ட செயற்குழுவுக்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பொறுப்பாகவிருப்பர்.

எனவே, மேற்படி முன்பள்ளி செயற்றிட்டத்தை மேம்படுத்த மாவட்டத்தில் உள்ள துறை சார்ந்தவர்களும், சர்வதேச உள்ளூர் நிறுவனங்களும், பொது அமைப்புகளும் பூரண ஆதரவினை வழங்க வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

# முதியோர் அடையாள அட்டை வழங்கும் பணி இன்றும்

ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் சங்கமும் முதியோர் நலன்பேணும் அமைப்பும் இணைந்து நடத்தும் முதியோருக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் 65 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 50 முதியவர்கள் கலந்துகொண்டு தமக்குரிய முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

இன்றும் இந்த நிகழ்வு தொடர்ந்து இடம்பெறவுள்ளதாகவும் -

நேற்றைய நிகழ்வில் கலந்து கொள்ளாத முதியவர்கள் இன்று கலந்துகொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள விரும்பும் முதியவர்கள தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதியையும் 100 ரூபா பணத்தையும் எடுத்துவரவேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-10-12)

# ஆண்டு நிறைவும் பரிசளிப்பும

யாழ்ப்பாணம்,ஏப்.18

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் ஆண்டு நிறைவுவிழாவும், பரிசளிப்புவிழாவும் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 8.30 மணிக்கு சி.சுஜீவா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அராசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்வார். (எ-5)

# சதாவதானியின் நினைவுதின விழா

யாழ்ப்பாணம்,ஏப்.18

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 96ஆவது ஆண்டு நினைவு விழா நாளை சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிலையத்தலைவர் அ.துரைசிங்கம் தலைமையில் சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கல்விவலயப பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம், யாழ்மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன், எழுத்தாளர் க.தம்பையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

பண்டிதர் வீ.பரந்தாமன் 'புலமையறாப் புலோலி' என்ற தலைப்பிலும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் திருமதி தனலக்குமி சிவானந்தம் 'தமிழ் தந்த பண்பாடு' என்ற தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

தொடர்ந்து கலாபூஷணம் சின்னமணி குழுவின் நிகழ்த்தும் வில்லிசை இடம்பெறும். (எ-5)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 1926 - 11 - 03



இறப்பு 2003 - 03 - 13

அன்புடையீர்!

கடந்த 13.03.2003 அன்று சிவபதமடைந்த எமது தந்தை

**அமரர் சங்கரப்பிள்ளை சரவணமுத்து**

அவர்களின் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய வைபவம் எதிர்வரும் 26.04.2003 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து அன்னாரன் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் 14.03.2003 அன்று நடைபெற்ற அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து துயரினைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலோப்பளை மேற்கு,
பளை. (சி-27466) . மக்கள், மருமக்கள்.

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## பெரியகடை மரக்கறிச் சந்தைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணும் சந்தையை 2003 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 31.12.2003 காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 250.00 செலுத்துவதன் மூலமும், கீழ்க்குறிப்பிடப்படும் கேள்விப் பிணைப்பணம் செலுத்துவதன் மூலமும் கேள்விப் படிவங்களை 24.04.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் யாவும் அன்றைய தினம் 3.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிற்பகல் 3.30 மணிக்கே கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும். பெரியகடை மரக்கறிச்சந்தைக் கேள்வி சமர்ப்பித்து சித்தி பெறுபவர் அன்றைய தினமே அதன் பகுதிப் பணத்தைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெரியகடை மரக்கறிச்சந்தை | கேள்விப் பிணைப்பணம் 10,000/- | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை 2,52,000/- (வற் நீங்கலாக) |
|---|---|---|

மாநகரசபை
யாழ்ப்பாணம்.
17.04.20003 (சி-27463)

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 02 - 07 - 1945



உதிர்வு 19 - 03 - 2003

**அமரர் வைரவி கந்தசாமி**

கற்பூரம் போல் தன்னைத் தியாகம்
செய்த உத்தமரே! அப்பா
பொன் போன்ற மேனியிலே
பொல்லாத நோய் புகுந்ததுவோ? அப்பா!

தகவல்:
க.யோகேஸ்வரி
(யாழ்.போ.வை.சா.ஊழியர்)
16/4, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (16920)

மனைவி:- யோகேஸ்வரி,
நின்நினைவே நினைவாக
நிற்பவர்களும், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சதாம் ஹுசைனுக்கு முடிவு கட்டினாலே போரை நிறுத்த அமெரிக்காவால் முடியும்!

1979 ஆம் ஆண்டு முதல் ஈராக்கில் இடம்பெற்றுவந்த சதாம் ஹுசைனின் நிர்வாகம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. 22 ஆண்டுகளுக்கு மேலான காலம் ஆயுத பலத்தால்



ஈராக்கை ஆட்சிசெய்த சதாமின் ஜனாதிபதிப் பதவி 21 நாள்களில் பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட நிலைமை எவ்வாறு ஏற்பட்டது? இந்த யுததத்தில் ஈடுபட்ட ஈராக்கிய ராணுவத்துக்கு என்ன நேர்ந்தது?

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி அமெரிக்கா ஈராக்கிற்கு எதிரான போரை முதலில் வான் தாக்குதல் மூலம் ஆரம்பித்தது. ஒருநாள் கழித்து அமெரிக்கா தரை மார்க்கமான தனது தாக்குதலையும் ஆரம்பித்தது. யுத்தத்தின் இடையே ஈராக்கின் மிகத் திட்டமிடப்பட்ட முறையிலான எதிர்த் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. முன்னேறிச் சென்ற அமெரிக்க ராணுவம் நஜாவ் நஸ்ரியா மற்றும் கர்பலா ஆகிய பிரதேசங்களில் ஈராக் இராணுவத்தினருடன் கடும் சண்டையில் ஈடுபடவேண்டியிருந்தது.

இவ்வாறானதோர் எதிர்ப்பு நிலையை எதிர்பார்த்திராத அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தமது யுத்த தந்திரோபாயங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. தலைநகர் பக்தாததிலிருந்து 100 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் இருந்த இப்பிரதேசங்களில் இடம்பெறும் யுத்தத்தில் இவ்வித சிரமத்தை எதிர்கொள்ள நேர்வதால், பக்தாத் நகருக்கான யுத்தம் மிகக் கடுமையானதாக இருக்குமென உலகெங்கிலுமுள்ள யுத்த நிபுணர்கள் நம்பினர்.

ஈராக்கின் இராணுவ பலத்துடன் ஒப்பிடுகையில் மிகப் பலம் வாய்ந்ததான அமெரிக்க இராணுவம் இந்த யுத்த்த்தில் வெற்றியடையும் என்பதில எவருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.



ஆனால், அவ்வெற்றிக்காக அமெரிக்கா கணிசமான இழப்புகளை விலையாகச செலுத்த நேரிடுமெனவே பலர் நம்பினர். ஏனெனில், சதாமின் கோட்டை எனக் கருதப்பட்ட பக்தாத் நகரத்தை ஈராக் ராணுவத்தின் பலம்மிக்க அணிகளான குடியரசுப் படைப்பிரிவும் தற்கொலைப் படைப்பிரிவும் பாதுகாத்து வந்தன.

ஆனால், எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறான நிகழ்வுகளே இடம்பெறறன. ஈராக் ராணுவத்தில் சாதாரண படைப் பிரிவு யுத்தமுனையில் நிகழ்த்திய தாக்குதல்போன்று கூட குடியரசுப் படையணியாலோ, அல்லது தற்கொலைப் படையணியாலோ சக்தி வாய்ந்த எதிர்த் தாக்குதல் எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. அமெரிக்க ராணுவத்தினர் ஒரேயொரு தற்கொலைத் தாக்குதலை மட்டும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. பக்தார். நகரை அமெரிக்கப் படைகள் அண்மித்த சமயம் ஈராக்கி இராணுவம் யுத்தத்தைக் கைவிட்ட நிலையையே காண முடிந்தது.

இதிலிருந்து இந்த யுத்தத்தின் பிற்பகுதியில் ஈராக் ராணுவத்தினரின் மனவுறுதி சீர்குலைந்து போய் விட்டதாக எண்ணத் தோன்றுகிறது. விபரித்துச் சொல்வதானால், பக்தாத் நகர யுத்தத்தின்போது ஈராக் ராணுவம் படிப்படியாகத் தனது எதிர்ப்பைக் கைவிட்டதாகக் கூற முடியும். பக்தாத் நகரில் ராணுவ ஆயுதக் கிடங்குகளில் ஆயிரக் கணக்கில் பலதரப்பட்ட ஆயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த போதும், அவற்றில் எவையும் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டதாகத் தோன்றாததை இதற்கு சிறந்ததோர் உதாரணமாகக் கொள்ளலாம். ஆயுதங்கள் ஆங்காங்கே கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட போதும், அவற்றைக் கையாளும் ராணுவ வீரர்கள் தொடர்பான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை. இடம்பெற்ற யுத்தத்தில் 3 ஆயிரம் வரையிலான ஈராக்கிய ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 7 ஆயிரம் வரையிலான ராணுவத்தினரைத் தாம் சிறைப்பிடித்து வைத்துள்ளதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது. அப்படியாயின் 3லட்சத்து 90 ஆயிரம் ஈராக்கிய இராணுவத்தினருக்கு, அதிலும் குறிப்பாக 50 ஆயிரம் குடியரசுப்படையினரின் கதி என்ன? அவர்களுக்கு என்ன நேர்ந்தது?

உண்மையில் அவர்கள் யுத்த களத்திலிருந்து ஓடித் தப்பிவிட்டனர். இது அமெரிக்காவுக்குக் கிடைத்த தற்காலிக வெற்றியே. முதலில் யுத்தம் தொடர்பாகத் திட்டமிட்டபோதே அமெரிக்கா, புதிய ஈராக்கிய நிர்வாகத்தை உருவாக்கும் போது எந்த வகையிலும் ராணுவத்தைச் சேர்ந்தோரை அதில் இடம்பெறாது ஒதுக்கி விடுவதற்கு எண்ணியிருந்தது. ஆனால், இவ்விதம் ராணுவப் பயிற்சிபெற்ற கூட்டத்தினர் ஈராக் நாடு முழுவதிலும் வியாபித்திருப்பது எதிர்காலத்தில் அமெரிக்க சார்பு நிர்வாகத்தின் ஸ்திரத்தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாய் அமையக் கூடும்.

ஈராக்குக்கு வெளியே, உலகத்தின் பலநாட்டுப் பொதுமக்கள் மத்தியில் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பெரும் வீர புருஷனாகவே மதிக்கப்பட்டார். பலம்மிக்க வல்லரசான அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு பணியாது ஈராக்கை சதாம் உறுதியோடு நிர்வகித்து வந்தமையே அதற்கான காரணமாகும். ஈரான் மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஈராக் நாட்டினுள்ளேயே ஷியா மற்றும் குர்திஷ் இன மக்களின் எதிர்ப்புக்கள் மத்தியிலும், போர்க்குற்றங்கள் பலவற்றைப் புரிந்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்டபோதும், சதாம், ஈராக் நாட்டின் சுனி அராபிய இன மக்களின் பெருமதிப்புக்குரிய தலைவராக விளங்கினார் என நம்பப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை வேறு விதமாக அமைந்துள்ளது. 1980 முதலான இருபது ஆண்டுக் காலத்துள் இடம்பெற்ற பேரழிவை விளைவித்த இரு யுத்தங்களின் பின்னரும் (அதாவது ஈரான் - ஈராக் யுத்தம் மற்றும் குவைத் யுத்தம்) ஈராக்கியப் பொது மக்கள் தமது தலைவருக்கெதிராகக் கிளர்ந்தெழாததால், ஜனாதிபதி சதாம் தன் நாட்டுப் பொதுமக்களின் ஆதரவு பெற்ற தலைவரேயென உலகம் நம்பியது.

ஆனால், சதாமின் பலம்மிக்க ராணுவம் தனது இரும்புச் சப்பாத்துகளால் ஈராக் பொதுமக்களின் தலைகளை மிதித்துக் கொண்டிருந்தமையாலேயே அவர்களால் சதாமின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழ முடியவில்லை. உண்மையில் தனது இராணுவ பலத்தின் மூலம் ஈராக் பொதுமக்களின் குரல் வெளிவராத விதத்தில் அவர்களது குரல்வளையைச் சதாம் நெரித்து வந்துள்ளார். இன்று ஈராக்கிய ராணுவத்தின் பலம் ஒடுக்கப்பட்டு விட்டமையால் ஈராக்கிய பொதுமக்கள் தம்மைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலி உடைத்தெறியப்பட்டது போன்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைப்பதை நம்மால் காணமுடிகிறது.

இதனாலேயே அவர்கள் தம்மை அடக்கியாண்ட அரசின் சொத்துக்களைக் கொள்ளையிடவும், சதாமின் சிலையை நிலத்தில் வீழ்த்தி அதனை தமது சப்பாத்துகளால் அடித்துத் தம் வெறுப்பை வெளிப்படுத்தவும் உற்சாகம் காட்டியமையை அவதானிக்க முடிந்தது.

**வீயெஸ்ரீ**

இச் சூழ்நிலை காரணமாக பலதரப்பட்ட கேள்விகள் உருவாகியுள்ளன. அதில் முதலாவது கேள்வி சதாம் ஹுசைனது தலைவிதி என்னவாகப்போகிறது?. என்பதாகும் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பின்னர் அவரும அவரது இரு மகன்களும் என்னவானார்கள் எனத் தெரியாதபோதிலும், அத்தாக்குதலில் சதாம் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது. இம்முடிவு உறுதிப்படுத்தப்படாத போதும், அவர் உயிருடன் இருப்பாராகில் அமெரிக்க உளவுத் துறையின் பார்வையிலிருந்து தப்பிவிட முடியுமா என்பது சந்தேகமே.

அதிசக்தி வாய்ந்த செய்மதித் தகவல் தொடர்பு தொடங்கி, சாதாரன உளவாளிகள் வரையான சகல வழிகளையும் அமெரிக்கா பிரயோகித்து சதாம் பற்றி உண்மை நிலையையறிய முயற்சிக்கின்றது. சுருக்கமாகக் கூறினால் சதாமிற்கு மிக நெருங்கிய அதிகாரியொருவரோ அன்றேல் ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ அமெரிக்க உளவுத் துறைக்கு தகவல்களை வழங்கி வருவதாக நம்பப்படுகிறது. சதாமை உயிருடனோ, அன்றேல் பிணமாகவோ கைப்பற்றும் வரை இந்த யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்கா கருத இயலாது.


அமெரிக்கா எவ்வாறாயினும் சதாமைக்கொன்றுவிடவே முயல்கிறது. ஏனெனில், இதுவரை அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட சகல தாக்குதல் நடவடிக்கைகளும் அக்குறிக்கோளின அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஒருவேளை சதாம் ஈராக்கை விட்டு தப்பிச் சென்றிருந்தால் அது அமெரிக்கா முகங்கொடுக்கவேண்டியதொரு பாரதூரமான பின்னடைவாக அமையும். அது அமெரிக்காவுக்கு பின்லேடன் போன்ற மற்றோர் எதிரியை உருவாக்குவதாய் அமையும்.

இவ்வாறான நிலைமை வருவதைத தவிர்த்துக்கொள்ள அமெரிக்கா முயற்சிக்கிறது. இருந்தபோதும் சதாமின் கௌரவத்தைக் காக்க நினைக்கும் சதாமின் விசுவாசமிக்க போர்வீர்களால அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படக்கூடும்.

அமெரிக்கா தான் ஆரம்பித்த இவ் யுத்தத்தில் பூரண வெற்றி பெற்றுள்ளதா என்ற பிரச்சினை அடுத்து எழுகின்றது. அந்த வகையில் பாரதூரமான கருத்து மோதல்கள் பல இடம்பெற்றுள்ளன. உலகத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஐ.நா.சபையைச் செல்லாக் காசாகக் கருதி, அமெரிக்காவும் பிரிட்டனும் இவ் யுத்தத்தை ஆரம்பித்தது ஈராக் வசமுள்ள பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் களையப்பட்டு, ஈராக் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டேயாகும்.

அமெரிக்கா ஈராக்கிடமுள்ள பயங்கர ஆயுதங்களை அழிக்க வேண்டுமென எதிர்பார்த்தது. ஆனால், அமெரிக்கப் படைகள் பக்தாத்தினுள் நுழைந்த சமயத்தில் கூட, அமெரிக்கா கூறி வந்த இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் எவையும் அமெரிக்க ராணுவத்துக்கெதிராகப் பாவிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் இரசாயன ஆயுதத் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்பு உடைகளை அணிந்தவாறு போரிட்ட அமெரிக்க ராணுவ வீரர்கள், பின்னர் அப்பாதுகாப்பு உடைகளைக் களைந்துவிட்டு யுத்ததில் ஈடுபட்டனர். ஈராக் வசம் அவ்வகை இரசாயன ஆயுதங்கள் எவையும் கிடையாது என தெரிந்து கொண்டமையினாலேயே அவர்கள் அவ்விதம செயற்பட முடிந்தது.

ஈராக் முன்னர் அவ்வகை இரசாயன ஆயுதங்களை தன் வசம் வைத்திருந்தது மட்டுமன்றி, ஈரானுடனான போரிலும், குர்திஷ் இன மக்களுக்கெதிராகவும் அவற்றைப் பாவித்துள்ளது. ஆனால் இப்போது....?



சிலவேளை, இவ்வகையான ஆயுதங்களை ஈராக்கிலிருந்து அமெரிக்கா இனிமேல் கண்டுபிடிக்கவும் சந்தர்ப்பமுண்டு. ஆனால், அதனை "உடைந்துபோன வீட்டில் எவராலும் ஓட்டையைக் கண்டுபிடிக்க முடியும்" என்பது போன்றே கருதமுடியும். எப்படியான போதிலும், இந்த யுத்தத்தில் ஈராக் அவ்வகைப் பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தாதது இந்யுத்தத்துக்கான அமெரிக்காவின் காரணத்தைச் செல்லுபடியற்றதாக்கிவிடுகிறது.

அமெரிக்காவின் தாக்குதல்களால கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த ஈராக்கியப் பொதுமக்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை முழுமையாக வெளிவரவில்லை. இருந்த போதும், போரில் ஏற்பட்ட நாசத்தை ஊடகங்களின் பார்வையிலிருந்து மறைத்து விடமுடியவில்லை. பல வழிகளிலான பயமுறுத்தல் வரையறைகளையும் மீறி, தமக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் எதனையும் கணக்கெடுக்காது, தமது உயிரையே பணயம் வைத்து போர்க்களத்தில் இவ் ஊடகத்துறையினர் ஆற்றிய பணியின் காரணமாக ஈராக் நாட்டினுள் இப் போரினால் ஏற்பட்ட அழிவுகளும் அவலங்களும் உலகத்துக்கு எடுத்துக்காட்டப்பட்டன.

ஈராக் உலகிலேயே எண்ணெய் வளம் கொண்ட நாடுகளில் இரண்டாவது இடத்தை வகித்த போதிலும், இன்று அங்கு எவ்விதத்திலும் எண்ணெய் பெற இயலாத நிலை உருவாகியுள்ளது. அவ்வாறு சேதமாக்கப்பட்ட, எண்ணெய்க் கிணறுகளைப் புனரமைக்கும் நோக்கில் வெளிநாட்டுப் பல்தேசிய நிறுவனங்களுக்கு அப்பணியை வழங்குவதற்கான திட்டங்களும் உள்ளன. யுத்தத்தை அமெரிக்கா ஆரம்பித்தமைக்கான முக்கிய நோக்கமே இந்த எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதேயாகுமென அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அடுத்து எழும் முக்கிய பிரச்சினை யுத்தத்தினால் அழிவுற்ற ஈராக நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயலாகும். இதற்கான திட்டத்துக்கான மொத்தச் செலவு ஒரு லட்சம் கோடி அமெரிக்க டொலராகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பெருந்தொகைப் பணத்தை ஐக்கிய நாடுகள் உதவி நிதியமும் மற்றும் உதவி வழங்கும் நாடுகளுமே வழங்க இயலும். ஆனால், இன்றைய உலகப் பொருளாதாரச் சிக்கல் நிலையில் சர்வதேச சமூகத்தால் இப்பெரும் தொகைப் பணத்தை உ... யதாயிருக்குமா என்பதே அப்பிரச்சினையாகும்.

சதாம் ஹுசைனது ஆட்சிக்கு எதிரான அமெரிக்க சார்பு ஈராக்கிய எதிரணிகள் தற்போது ஈராக்கின் புதிய நிர்வாகத்தைப் பொறுப்பேற்கத் தயாராயுள்ளன. தற்போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு அமெரிக்காவின் உதவியுடன் வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற 700 ஈராக்கிய ராணுவ வீரர்கள் தற்போது ஈராக்கை வந்தடைந்துள்ளனர்.

ஆனால், அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏயின் தகவலின்படி, வெளிநாடுகளில் அரசியல் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த ஈராக்கிய எதிரணித் தலைவர்கள் பற்றி ஈராக்கிய பொதுமக்களுக்கு நல் அபிப்பிராயம் கிடையாது. ஆகவே, பொதுமக்களின் அபிமானம் பெறக்கூடிய அரசொன்றை ஈராக்கில் நிறுவுவது இப்போதைய சவாலுக்குரிய விடயமாகும். ஆனால், உண்மையில் ஈராக்கில் அமையவிருக்கும் புதிய அரசு அமெரிக்கச் சார்புடைய அரசாகவே இருக்கும் என்பதே யதார்த்தமாகும். இந்தவகையில் வளைகுடாப் பிரதேசத்தில் அமெரிக்காவுக்கு விருப்பமற்ற மற்றொரு நிர்வாகி தனது இறுதிப் பயணத்தை ஆரம்பித்துவிட்டார் இந்த இறுதிப் பயணத்தையடுத்து ஈரான் நாட்டுக்கும் பாரதூரமான சிக்கல் ஆரம்பிக்கிறது. ஈரான் நாடு மட்டுமல்ல சிரியா நாட்டுக்கும் மேற்குலகப் பலவான்களின் நெருக்குதல்கள் தலையெடுக்கக் கூடுமென்பது சர்வதேச நோக்குநர்களின் நம்பிக்கையாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

1962 புனர்பூசம், செவ்வாய் 2, U.K.இல் Chartered Engineer Consultant உத்தியோகத்தருக்கு Professional/ உயர்தரத்தில் மணப் பெண் தேவை. மணமகன் யாழ்ப் பாணத்தில் உள்ளார். துரை விமலா இந்து திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (16883)

சீதனம் கொடுத்து திருமணம் செய்ய முடியாதிருப்பவர்கள், சீதனம் கொடுத்து செய்யக்கூடியவர்கள் ஆண கள், பெண்கள் உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ இருப்போர் நேரிலோ தபால மூலமோ தொடர்புகொள்ளலாம். உள் நாட்டு, வெளிநாட்டு விவரங்கள் உள் ளன. செல்லம்மா திருமணசேவை, கியூரான் சங்கத்தடி, கரவெட்டிகிழக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம் T.P 01422619, 0777-047145, 0777- 047314 (16900)

1975ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமற்ற, ஆயிலியம் நட்சத்திரம் உடைய ஆசிரியராகத் தொழில் புரி யும் ஆணிற்கு குடும்பப் பாங்கான தொழில் புரியும் மணமகள் தேவை. பொருத்தமானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். (16897)

1975 ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமற்ற, திருவோணம் நட்சத்திரம் உடைய Computer Engineer ஆக Londonஇல் பணிபுரியும் ஆணிற்குப் பொருத்தமான மணமகள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை,178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (16898)

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள் விற்பனைக் குண்டு. மொத்தமாகவும் சில்லறையா கவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இ. சேகர்,162, அரசடி வீதி, நல்லூர் (டயனா கொமினிகேசன் முன்பாக). T.P. 3146 (16866)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ் சுகள், அதிவிசேட Prima பேட்டுக குஞ்சுகள் 24-04-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். அத்துடன், 2½ மாத Prima Hyline வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும் விற் பனைக்கு உண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் விடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (16891)

## இறைச்சிக்கோழிகள் தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் விடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி, நல்லூர். (16893)

## பெரும்படை அம்மன் ஆலயத்தில் உற்சவம்

கொழும்புத்துறை ஏப்.18

இடப்பெயர்வின் பின்னர் வழிபாடு கள் இடம்பெறாதிருந்த நாவற்குழி தெற்கு பெரும்படை அம்மன் கோவில் பகுதியில் தற்பொழுது மக்கள் மீளக குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து மேற்படி ஆலயத்தில் மகேஸ்வர பூஜை, பொங்கல் என்பன இடம்பெறவுள்ளன. இன்று பகல் 2 மணிக்கு வாவடியும் தொடர்ந்து அபி ஷேக ஆராதனைகளும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும். இரவு பொங்க லும் நடைபெறும் என ஆலய நிர்வா கத்தினர் தெரிவித்தனர். (ஒ-30)

## தேவை

ஆணி மெசின் இயக்குநர் தேவை

தொடர்பு

கேதீஸ்

T.P.: 222 5033

(16886)

## வீடு விற்பனைக்கு

சிவன் வீதி, உரும்பிராயில் 8 பரப்புக் காணியுடன் வீடு விற்ப னைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திருமதி ஞானமணி மகாதேவன்

சிவன்வீதி,

(16888) உரும்பிராய்.

## விற்பனையாளர்களும் முகவர்களும் தேவை

பவர் செலூலர் நிறுவனத்திற்கு விற்பனையாளர்களும் முகவர்களும் உடனடியாகத் தேவை. இருபாலாரும் விண்ணப் பிக்கலாம். நேரில் தொடர்புகொள்ளவும்.

**பவர் செலூலர்,**

இல.183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(வின்ஸர் தியேட்டர் முன்பாக,

நியூ லலிதா கட்டடம், முதலாம் மாடி)

(169145)

## வேலையாள்கள் தேவை

1. பெற்றோல் பம்பர்
2. அலுவலகப் பணியாள் (பியோன்)

சுயவிவரத்துடன் குறிப்பாக உறவினர்கள் அல்லாத இரண்டு சிபார்சுதாரர்களின் பெயர்களுடன் 24-04-2003 வியாழக்கிழமைக்கு முன் அஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்

லங்கா பில்லிங் ஸ்ரேசன்

173, பலாலி வீதி,

(சி-27456) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



Lion சின்னத்துரை யோகராசா

கிராம உத்தியோகத்தர்

முன்னைய பிரிவு

சாவகச்சேரி வடக்கு J/303

தற்போதைய சேவை பிரிவு

அத்தியடி J/78 யாழ்ப்பாணம்.

அவர்கள் கிராம உத்தியோகத்தர் சேவையில் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது கடமையுணர்வு, தன்னலமற்ற சேவை, சிறப்பான மக்கள் தொடர்பாடல் மூலம் மக்கள் மனங்களை வென்று எல்லோரது நன்மதிப்பையும், பேரன்பையும் பெற் றுள்ளவரான கிராம உத்தியோகத்தர் அவர்கள் மேலும் பல பதவி உயர் வுகள் பெற்றுப் பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புடனும் வாழ இறையருள் வேண்டி வாழ்த்தும்

பொதுமக்கள்

சாவகச்சேரி வடக்கு.

குறிப்பு: பிரிவுபசார வைபவம் நாளை (19.04.2003) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (16904)

## BIT

Bachelor of Information Technology

University of Colombo School of Computing



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமான பட்டக்கல்விக்கான, கல்வியாண்டு 2003/ 2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி - 25.04.2003**

IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது!

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தருவது IIS நிறுவனம் மட்டுமே.

"உங்கள் எதிர்காலத்தை மாற்றியமைக்கக்கூடிய இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்"


**INSTITUTE OF INFORMATICS STUDIES**

No. 100, Clock Tower Road, Jaffna

Tel : 21 222 2831

## இரண்டாம் வருட நினைவலைகள்

மண்ணில் 23 - 10 - 1936



விண்ணில் 09 - 05 - 2001

### அமரர் பாலன் கிருஷ்ணபிள்ளை

*(கோண்டாவில்)*

திதி: 18.04.2003

அன்பிற்கு அகல்விளக்காய்

பாசத்தின் இருப்பிடமாய்

பண்பின் உறைவிடமாய்

பாரினில் வாழ்ந்தீர்கள்!

இன்று உங்களை எம் மனதில் நினைவுகூர்ந்து உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

*நாவலடி, உடுப்பிட்டி.* (16902) - குடும்பத்தினர்.

## WANTED

A Hospital Trained Dispenser

Apply before 25 th April to

**BUSINESS OFFICER**

Mc Leod Hospital,

Inuvil.

(16901)

## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவம்

மேற்படி உற்சவம் எதிர்வரும் 21.04.2003 திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது. இதனை முன்னிட்டு அம்பாள் தெரு வீதி உலாவாக எதிர்வரும் 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை பகல் கிருஷ்ணர் கோவிலடி, பூதர்மடத்தடி, பழைய வீதி ஊடாக இருபாலைச் சந்தி மீண்டும் பருத்தித்துறை வீதியூடாக வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றை தரிசித்து ஆலயத்தை வந்தடைவார். ஆலயத் திருக் குளிர்த்தி தினமன்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

ஆலய பரிபாலன சபை,

(சி-27459) பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்.

## புதியதோர் உதயம்! சாவகச்சேரியில்!!

தென்மராட்சி மக்களின் நன்மை கருதி

★ பற்சிகிச்சை நிலையம் ★

ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

**றெனி பல் = மூக்குக் கண்ணாடி அகம்**

கண்டி வீதி, சாவகச்சேரி

★ பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணிவரை சிகிச்சை அளிக்கப்படும்.

★ முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். (16913)

## அந்தண மாணவர்கட்கு

2002 மார்கழியில் நடைபெற்ற க.பொ.த.ப.(சா/தர) பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை 2003.04.30 இற்கு முன் எமக்கு அனுப்பிவைக்கவும்.

*சிவன் கோவில்,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (சி-27458)

செயலர்,
நியந்த்ரீ.

## வங்கி அறிவித்தல்

21.04.2003 திங்கட்கிழமையன்று

விசேட வங்கி விடுமுறை தினமாகும்

கீழ்வரும் வங்கிகள் அன்று மூடப்பட்டிருக்கும் என வாடிக்கை யாளருக்கு அறியத்தருகின்றோம்.

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

கொமர்ஷல் வங்கி

ஹட்டன் நஷனல் வங்கி

தேசிய சேமிப்பு வங்கி

செலான் வங்கி

(சி-27457) யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவமணி விஜயரட்ணம்

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி சிவமணி விஜயரட்ணம் அவர்கள் நேற்றுமுன்தினம் 16-04-2003 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் விஜயரட்ணத்தின் (கியா மெக்கானிக்) அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-04-2003) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு,*
*பெரிய மதவடி,*
*சுன்னாகம்.* (16905)

சு.விஜயரட்ணம்
(கணவர் - கியா மெக்கானிக்)

### துரையப்பா இராசலிங்கம்

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் தலையாழி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இராசலிங்கம் அவர்கள் நேற்று (17-04-2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நல்லம்மா தம்பதி களின் சிரேஷ்ட புதல்வனும் சின்னையா - காலஞ்சென்ற அன்னபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் கனடாவில் வசிக்கும் ரஜனி,ரஞ்சன், ரமணன் மற்றும் ராகினி,ரஜீவன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஞானச்சந்திரன் தக்ஷினி ஆகியோரின் மாமனாரும் சாரகா, சாலூயா, சாருஜன், சுருதிகா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனும் பத்மாவதி (கனடா), யோகராசா (இணுவில்), நிர்மலாதேவி (கொக்குவில்), வடலியடைப்பில் வசிக்கும் மகாலிங்கம், திலகவதி, சபாரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதி வீதி,*
*தலையாழி, கொக்குவில்* (16909)

தகவல்:
ரஜீவன் (மகன்)

# கிறிஸ்தவ ஆலயங்களில் இன்று பெரிய வெள்ளி ஆராதனைகள்

கொழும்பு,ஏப்.18

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பெரிய வெள்ளி இன்று உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு இலங்கையிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் இன்று பிற்பகல் மூன்று மணி நேர விசேட ஆராதனைகள் நடைபெறும்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் கொழும்பு பேராயர் அதிவண.ஒஸ்வால்ட் கோமிஸ் தலைமையிலும், பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள வாழும் மீட்பர் தேவாலயத்தில் வண.பிதா அட்ரியன ஆரோன் தலைமையிலும், கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ட் ஆலயத்தில் வண. பிதா துலீப் பெர்னாண்டோ தலைமையிலும், ஆராதனைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நகரங்களிலும் பெரிய வெள்ளி விசேட ஆராதனைகள் நடைபெறும். (எ)

## பிற்போடப்பட்டுள்ளது

**இன்று (18.04.2003) அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தால் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும், இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

**லயன்ஸ் கழகம்**
**அச்சுவேலி வட்டம்.**

(16925)


**SHARP - யப்பான்**



ஷார்ப் (SHARP) யப்பானிய அதி உயர் தொழில்நுட்ப தயாரிப்புக்களை யாழ். நகரிலும் உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்கு பிந்திய சேவையில் பெற்றிட.....

**பிறவுண் அன்ட் கம்பனி**

**பிறவுண்ஸ் காட்சியறை**
**இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. : 021-222 5150**

குறிப்பு: ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு விசேட விலைக் கழிவு 7.5% வழங்கப்படும். ஏப்ரல் 30 வரை மட்டுமே.

(C/27461)


**தேவை**

**தரமான புறொயிலர்கள் தேவை.**
**உடன் பணம் வழங்கப்படும்.**

தொடர்பு : சிவா,
இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.

(16916)


**லஷ்சுமி** இணுவில்

சரத்குமார், தேவயானி, சுரேஸ்கோபி நடித்த

**சமஸ்தானம்**

(ரீகல்ஸ்)

காட்சி: 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

(16907)

**நிறைஞ்சனாஸ்** சுன்னாகம்

விஜயகாந்த், சிம்ரன் நடித்த

**ரமணா**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**JURASSIC PARK - 3**

(C-27407)

**விபேட்டி** அச்சுவேலி

கார்த்திக், லைலா, மாளவிகா, மனோரமா நடித்த

**ரோஜாவனம்**

(ரீகல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
(C/27454) T.P.: 070 212223

**ராஜா** யாழ்ப்பாணம்

சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த

**அரசு**

10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30இற்கும்

(C/27122)

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், ரம்பா, நிழல்கள்ரவி நடித்த

**என்றென்றும் காதல்**

(ரீகல்ஸ்)

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(16910)


# இறைவரி அதிகாரசபை சட்டமூலம் குறித்து பேச வராவிடின் நடவடிக்கை!

## சுங்க, கலால், இறைவரி திணைக்கள சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.18

உள்நாட்டு இறைவரி அதிகார சபை சட்டமூலம் குறித்து தங்களுடன் ஆராயப்படாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சுங்க, கலால், உள்நாட்டு இறைவரி திணைக்கள தொழிற்சங்கக் கூட்டு முன்னணி எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இத்தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அந்த முன்னணி தெரிவித்திருக்கிறது.

இச்சட்டமூலத்தை தயாரிப்பது குறித்து தொழிற்சங்கங்களின் கருத்துக்களை அறிந்துகொள்ள விசேட குழுவொன்று அமைக்கப்படுமென பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன கடந்த செப்டெம்பர் மாதம் உறுதியளித்திருந்தார் என்று முன்னணியின் அமைப்பாளர் விபுல மினுவம்பிட்டிய சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆயினும், தொழிற்சங்கங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளாமலே இறைவரி அதிகாரசபை சட்ட மூலத்தின் கீழ் வருமான நிர்வகிப்பு ஆலோசனைச் சபைகள் நிறுவ ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது எனவும் முன்னணி தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும், மேற்கொள்ளப்படவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கை என்ன என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் விபுல மினுவம்பிட்டிய தெரிவித்திருக்கிறார். (எ)

## காணவில்லை



**செல்வன்**
**குணபாலசிங்கம் ரமேஸ்குமார்**

16.04.2003 புதன்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்ற "இந்திரவிழா"வைப் பார்ப்பதற்கு துவிச்சக்கரவண்டியில் அச்சுவேலியில் இருந்துசென்ற எனது மகன் (வயது 15) இன்று வரை வீடு திரும்பவில்லை.


**இவரைப் பற்றித் தகவல் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

*முகவரி: அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

(16927)

தகவல்:
**சி.குணபாலசிங்கம்** (தந்தை)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர்**
**கிருஷ்ணபிள்ளை சிறிதரன் (சிந்து)**
*(பூந்தோட்டம் - தெல்லிப்பழை)*

**19.03.2003 அன்று காலமான அன்னாரின் 31ஆம நாள் நினைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ்வு ஆகியன இன்று (18.04.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

மண்ணில்: 23.06.1965
விண்ணில்: 19.03.2003

(16929)

தகவல்:
**மனைவி, மகன், குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### காசித்தம்பி சாந்தலிங்கம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசித்தம்பி சாந்தலிங்கம் நேற்று (17.04.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசித்தம்பி - நாகம்மாவின் மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் பஞ்சாட்சரம், இராமநாதன், நவரட்ணம், பாக்கியம் ஆகியோரது அன்புச் சகோதரரும் பாஸ்கரன் (பிரான்ஸ்), சாந்தினி, காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் நந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரது அன்புத் தந்தையாரும் அருள்சோதிநாதன் (இலங்கை புகையிரதத் திணைக்களம், கட்டட பரிசோதகர் - திருகோணமலை), வசந்தகுமார் (சுவிஸ்), ராதிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகலியா, அர்ஜுன், தர்மின், தனுசன், பானுயா, பகிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலங்கை வங்கி ஒழுங்கை,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

(16928)

தகவல்:
க.அருள்சோதிநாதன்
(மருமகன்).

### பரமநாதன் தர்மராசா

*(ஊழியர் - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)*

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் தர்மராசா நேற்று (17.04.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமநாதன் - காலஞ்சென்ற இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும் இராசையா - சோதி தம்பதிகளின் மருமகனும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மாணவர்களான தனுசா, தர்மிளா, சர்மிளா, தர்மினி, நிரோசன், நிர்மலன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நேசராசா (காணிப் பதிவகம், யாழ்.), பாஸ்கரன் (லண்டன்), கேதீஸ்வரன் (ஊழியர், யாழ்.புனித மரியாள் வித்தியாலயம் OLR), நேசமலர், வசந்தமலர் ஆகியோரின சகோதரனும் இராசவேல், சுகந்தி, சதானந்தராசா, சந்திரகுமாரி ஆகியோரின மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் ஏற்றத்தடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

(16924)

தகவல்:
குடும்பத்தினர்.


யாழ். மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கிவரும்

**லொயலாஸ் கல்யாண மண்டபம்**

**இன்று (18.04.2003) தனது 2ஆவது ஆண்டு நிறைவில் காலடி பதிக்கின்றது.**




யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக போக்குவரத்து வசதியுடன் கூடிய அமைதியான இடத்தில், பாதுகாப்பான சூழலில் நவீன வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட சகல வசதிகளுடனும் கூடிய சிறந்த ஒலி, ஒளி அமைப்புடன் சிறந்து விளங்கும்

**"லொயலாஸ் கல்யாண மண்டப"த்தில்**

★ திருமணம் ★ திருமணப்பதிவு ★ அரங்கேற்றம்
★ இன்னிசை நிகழ்ச்சி ★ கலை நிகழ்ச்சி ★ கருத்தரங்கு, மாநாடுகள்.
★ ஒன்று கூடல் ★ மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு

☆ யாழ்ப்பாணத்தில் என்றும் எங்கும் நீங்கள் அனுபவித்திராத நாவுக்குச் சுவையூட்டும் உணவு வகைகள், சைவ, அசைவப் புரியாணி மற்றும் சிற்றுண்டி வகைகள், பல வகையான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகளுடன் நிகழ்ச்சியினை சிறப்புடன் நடத்தி மகிழ்ந்திட நாடுங்கள் எம்மை.

*எமது பிற சேவைகள்:*

* குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்.
* திருமணக் கார்.
* கொழும்பில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகள்.
* மட்டன் புரியாணி வகைகளை மொத்தமாகவும், ஓடருக்குத் தரமாகவும் நியாய விலைகளிலும எமது சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**'லொயலாஸ் கல்யாண மண்டபம்'**

இல. 59, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. : 2110 3352
0777 734083

4ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(முன்னைய லீலா ஸ்ருடியோ முன்பாக)

"எங்கள் சேவை உங்கள் தேவைக்கே"

(சி-27462)

# முஸ்லிம் மீனவர்கள் அச்சுறுத்தப்பட்டனராம்!

மூதூர்,ஏப்.18

கிண்ணியாவிலிருந்து இரண்டு படகுகளில் நேற்றுக்காலை மீன்பிடிக்கச் சென்ற 16 மீனவர்கள் மூதூர் இறங்கு துறைக்கு அருகே சுமார் 13,14 வயது மதிக்கத்தக்க - ஆயுதம் தாங்கிய சில தமிழ் இளைஞர்களால் வழிமறிக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. அந்தக் கடற்பகுதிக்குத் தொழில் செய்ய முஸ்லிம் மீனவர்கள் வரக்கூடாது என்று அவர்கள் எச்சரித்து தம்மிடமிருந்த மீன்களையும் பறித்தெடுத்துக்கொண்டு தம்மைத் திருப்பி அனுப்பி வைத்தனர் என்று அந்த மீனவர்கள் நேற்று முற்பகல் மூதூரில் தங்கியிருந்த அமைச்சர் ஹக்கீமிடம் நேரடியாக வந்து முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, முஸ்லிம் மீனவர்களைக் கணிசமாகக் கொண்ட மூதூர் பகுதியில் பதற்றம் தீவிரமாகியுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"ஆழ்கடலுக்குச் சென்றால் கடற்படை விரட்டுகிறது; கரைக்குச் சென்றால் இவர்கள் கலைக்கின்றார்கள்" என்று அந்த மீனவர்கள் அமைச்சர் ஹக்கீமிடம் தெரிவித்தனர்.

தங்களுடைய பிரச்சினைகளுக்கு மூதூரில் ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கும் சுமுகமான தீர்வைப் பெற்றுத்தராமல் மூதூரை விட்டுப் புறப்பட வேண்டாம் என்று மு.கா.பிரமுகர்களை அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

(ஐ)

# உற்பத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

வலி.மேற்கு,ஏப்.18

யாழ்.மாவட்டத்தில் 10 உற்பத்திக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மீன் பிடி, விவசாயம் ஆகியவற்றில் ஈடுபடும் குடும்பங்களைக்கொண்ட கிராமங்களே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என யாழ்.செயலகம் அறிவித்துள்ளது.

மீன்பிடியை விருத்தி செய்தல், கடலுணவுகளை பதனிட்டு சந்தைப்படுத்தல், விவசாய உற்பத்தியை அதிகரிப்பதுடன், உற்பத்திப் பொருளகளுக்கான சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றை மேற்கொள்வதன் மூலம் சம்பந்தப்பட்ட கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் யாழ். செயலகத்தினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-175)

# கிணற்றில் வீழ்ந்த சிறுவன் பலி!

யாழ்ப்பாணம்,ஏப்.18

கிணற்றுக்கட்டில் ஏறி விளையாடிய 6 வயதுச் சிறுவன் தவறிக் கிணற்றினுள் விழுந்து உயிரிழந்தான். நீர்வேலி மத்தியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடனபாதம் திலக் (வயது 6) என்ற சிறுவனே மரணமானான்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம், அங்கு நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-15-180)

## கைதடி இல்ல சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவேண்டிய கடப்பாடு நீதிமன்றத்துக்கு உள்ளது. அந்த அடிப்படையில் இந்த விவகாரம் குறித்தும் நடவடிக்கையை நீதிமன்றம் எடுத்திருந்தது. இந்த விவகாரத்தை பெரிதுபடுத்தி, தவறான செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன என்று நீதிவான் க.அரியநாயகம் பேரவை உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

சைவச் சிறுவர் இல்லத்தை பராமரிக்க நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இடைக்கால நிர்வாகம் அமைப்பது நல்லது. அந்த நிர்வாகத்தில் பேரவையின் உறுப்பினர்களும் இடம்பெறவேண்டும். அந்த உறுப்பினர்களின் விவரங்களை சமர்ப்பிக்கும்படி நீதிவான் பேரவை உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அவகாசம் தேவை எனப் பேரவை உறுப்பினர்கள் கோரியதை அடுத்து 15 நிமிட நேர அவகாசத்தை அவர்களுக்கு நீதிவான் வழங்கினார்.

இதையடுத்து மீண்டும் கலந்துரையாடல் ஆரம்பமானபோது நீதிமன்ற மேற்பார்வையில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்றும் அந்த நிர்வாகத்தில் பங்காளிகளாக இணைந்து கொள்வதில் பேரவை உறுப்பினர்களுக்கு உடன்பாடு இல்லை என்றும் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நீதிவான் தமது உத்தரவைப் பிறப்பித்தார்.

இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்த பேரவை விரும்பாத காரணத்தால், இல்லத்தில் உள்ள சிறுவர், சிறுமியரை உடுவிலில் அமைந்திருக்கின்ற வாழ்வகத்தில் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சிறுவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான உதவிகளை இந்து கலாசார அமைச்சு வழங்கும் என்றும் நீதிவான் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

*ஆசிரியர் குறிப்பு:* சைவச்சிறுவர் இல்ல சிறுவர்களை இரட்சண்ய சேனையின் பராமரிப்பில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதாக வெளியான செய்தி தவறு என நீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ளது.

(ஆர்)

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது. சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால், அந்த ஆயிரம் பேருக்கு போட்டிப் பரீட்சை வைத்தே நியமனம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

போட்டிப் பரீட்சைகள் எதுவுமின்றி அரசாங்கம் உறுதியளித்தபடி தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும். இல்லையேல் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அந்தப் போராட்டத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய ஆதரவைக் கோரவிருக்கின்றோம்.

அத்துடன், மாணவர் சமூகம் மற்றும் பெற்றோர்களும் கூட தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும். வடக்கு - கிழக்கில் 25 ஆயிரம் தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால், 19 ஆயிரம் ஆசிரியர்கள் மட்டுமே தற்போது சேவையில் உள்ளனர். தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டால் கூட அவர்களுடன் சேர்த்து 20 ஆயிரம் அசிரியர்களே சேவையில் இருப்பார்கள். அப்போதும் மேலும் 5 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவும். இவற்றையெல்லாம் அரசாங்கம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் கல்வி அமைச்சு சகல பாடசாலைகளுக்கும் கைநூல் ஒன்றையும், ஓடியோ, வீடியோ கசெட் ஒன்றையும் வெளியிட்டு அனுப்பி வைத்துள்ளது. அவையாவும் தனிச்சிங்கள மொழியிலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. இதனையும் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

இதுபோலவே மகரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவகம் வெளியிடுகின்ற கைநூல்கள், விளக்கக் குறிப்புகள் யாவும் சிங்கள மொழியிலேயே ஆக்கப்படுகின்றன. அங்கு தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றது. எனவே, வடக்கு - கிழக்குக்கென தனியான தமிழ் மொழிமூல கல்வி நிறுவகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் எனவும் நாம் கோரியுள்ளோம். இவற்றுக்கெல்லாம் அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே எமது எதிர்ப்புப் போராட்டங்கள் அமையும். -

என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளான திருமதி ச.ஜெயராசா, தடஞ்சலிங்கம், சகுமாரசாமி, அஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-4)

## சக்திகிரீவனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனு மீதான விசாரணை இடம்பெற்ற சமயம், இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடியவில்லை. இதன் காரணமாக சந்தேக நபர்களுக்குப் பிணை அனுமதிக்க முடியாது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பிணை மனுவை நீதிவான் நிராகரித்தார்.

சக்திகிரீவனைப் பிணையில் விடுமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இடம்பெற்ற சமயம், பொலீஸார் தரப்பில் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-117-31-3)

## மூதூர்ப் பகுதியில்...

(முதலாம் பக்கத். தொடர்ச்சி)

என்பது விசாரணைகளின் பின்னர்தான் தெரியவரும் எனவும் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் முஸ்லீம் தலைவர்களுக்கிடையே கடந்த சில நாள்களாக நிலவிவரும் அரசியல் பிரச்சினைக்கும் நேற்று மாலை நடந்த துப்பாக்கிச் சண்டைகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை எனவும் பொலீஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சமரிலும் அதையடுத்து நடந்த மோதல்களிலும் முஸ்லிம் ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் நான்கு முஸ்லிம்களும் மூன்று தமிழர்களும் காயமடைந்தனர் என முதலில் கிடைத்த தகவல் தெரிவித்தன.

இவர்களில் கடுமையான சூட்டுக் காயங்களுக்கு இலக்கான அப்துல் ஹக்கீம் (வயது25), கம்ருன் (வயது23) ஆகிய இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் நேற்றிரவு அவசர சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தாக்குதலுக்கு இலக்காகி கையுடைந்த நிலையில் ஆபிதா (வயது 44) என்ற பெண் மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாயில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த செய்யத் முகம்மத் உஜைஹிம் (வயது 38) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையான - மீனவர் ஒருவரின் சடலம் நேற்று முன்னிரவு சேருநுவர வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த அமானுல்லா பிஹெர (வயது 19) என்ற இளைஞரும் சேருநுவர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மல்லிகைத்தீவுக்கும் பாலத்தோப்பூருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் மூன்று தமிழர்களும் காயமடைந்தனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கோபால் என்பவரும் அடிகாயங்களுக்கு இலக்கான கலைவேந்தன் என்பவரும் சேருநுவர வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில் -

நேற்று மாலை மூதூரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை அடுத்து மூதூரில் பலபகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது. அப்பிரதேசங்கள் இருளில் மூழ்கின.

ஆங்காங்கே சில இடங்களில் வீடுகள் எரிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகின 'எல்வ்' வாகனம் ஒன்றும் மூன்று மோட்டார் சைக்கிள்களும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மூதூர்ப் பகுதிக்கு மேலதிகப் பொலீஸாரும் இராணுவத்தினரும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர். என தெரிவிக்கப்பட்டது.

மூதூரில் தங்கியிருக்கும் அமைச்சர் ஹக்கீம், நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு மற்றும் மோதல் சம்பவங்களை அடுத்து அப்பிரதேச பொலீஸ் அத்தியட்சகர் தயா சமரக்கோன் மற்றும் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் ஆகியோரை அழைத்து அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். பதற்றத்தைத் தணித்து நிலமையை சுமுகமாக்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து அப்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூதூர் பதற்ற நிலமை குறித்து பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் அமைச்சர் ஹக்கீம் அறிவித்தார் எனவும் கூறப்பட்டது.

(ஐ-12)

## உயர்மட்டக்குழுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியாத நிலையில், அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதில் அர்த்தமில்லை என்று அரசியல் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கருத்து வெளியிட்டனர்.

ஐ.தே.கட்சிக்கும் அரசுக்கும் எதிராகக் காரசாரமான கருத்துக்கள் கூட்டத்தில் எதிரொலித்தன.

இந்த நெருக்கடி நிலையில் அடுத்த ஓரிரு தினங்களுக்குள் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கும் நிலைக்கு அமைச்சர் ஹக்கீம் தள்ளப்பட்டிருக்கின்றார் என்று அவரது கட்சிப் பிரமுகர் ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடி நிலையைத் தணிப்பதற்காக ஐ.தே.கட்சியின் உயர் மட்டக்குழு ஒன்று இன்று மூதூர் வருவது குறித்தும் நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பிரதமர் தாம் நேரடியாக வந்து மூதூர் நிலையை நேரில் கண்டறிவதை விடுத்து வேறு குழுவை அனுப்பிவைக்கின்றார் எனவும், இது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் முக்கியஸ்தர்கள் சிலர் கூட்டத்தில் குறைபட்டுக்கொண்டனர். கடும் அதிருப்தியையும் தெரிவித்தனர். எனத் தெரியவந்தது.

நேற்றிரவு தமது கட்சியின் அரசியல் உயர் குழுவின் கூட்டத்தை முடித்துக்கொண்டு நேற்றுப்பின்னிரவில் அமைச்சர் ஹக்கீம் மூதூரில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றார் எனவும் தெரியவந்தது.

(ஐ)


புதிய வீடியோ CD வெளியீடு
விக்ரம் நடித்த
★ காதல் சடுகுடு
பிரபுவின்
★ பந்தா பரமசிவம்
வீடியோ CD பிரதிகள் உடன் பெறலாம்.
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு.

முக்கிய அறிவித்தல்
இலங்கையின் மிக முன்னணி
இணைந்த கணித ஆசிரியர்
திரு: குணசிங்கம்
யாழ். மாணவர் நலன்கருதி
இன்று 12 மணிக்கு
ஆரம்பமாகும் அலகுகள்
☆ நிகழ்தகவு ☆
☆ சார்புவேகம் ☆
NEW SCIENCE CENTRE
(C/27467) யாழ்நகர்.

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு:
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/27282) தொலைபேசி: 0777-733992

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
❋ பந்தா பரமசிவம்
❋ ஸ்ரீ துர்க்கை அம்மன்
(மொத்தத்துக்கும் பிரதிகள் பெறலாம்)
வீடியோ விமல்
(16926) யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
○ பிரபு நடித்த பந்தா பரமசிவம்
○ சிறிதுர்க்கை பரமேஸ்வரி
○ விக்கிரமின் காதல் சடுகுடு
விஷ்ணு வீடியோ
கொண்டாவில்.
வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு
சோலை வீடியோ, பிரதான வீதி
நெல்லியடி
(C/27465)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2005
✡ கலை, வர்த்தக ✡
✡ கணித, உயிரியல் ✡
எமது வழமையான
"SUPER GRADE" ஆசிரியகுழு
ஆரம்பம்:
19.04.2003 சனி 2.00 p.m.

வணிகக்கல்வி
பகுதி II
G.C.E. A/L 2004
(புதிய பிரிவு)
ஆரம்பம் ⇒
19.04.2003 ⇒
Sat. 3 p.m.
By: திரு. S. யசோ
BEACON (யாழ்நகர்)
(16867)

நன்றிகூறிப் பெருமையடைகிறோம்
2002ஆம் ஆண்டு O/L எடுத்து உயர்வான, சிறப்பான பெறுபேறு பெற வைத்த, ஒழுக்கத்தில் உயர்ந்த, நல்லூர் சயன்ஸ் அக்கடமி இயக்குநர், பெருமைக்குரிய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகூறிப் பெருமையடைகிறோம். எமது நல் உயர்விற்காய் ஊக்கமளித்த இந்நிறுவனம் எம் தேச மாணவர்களுக்காய் தொடர்ந்தும் ஊக்கமளிக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சயன்ஸ் அக்கடமி,
நல்லூர்.
(16918)
நன்றியுடன்:
2002 O/L மாணவர்கள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.